Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-01 | 18-10-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-243



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா.

T.P.-024-2222464

இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.021-2225987

(J 12955)

# சனாதிபதியின் எதிர்ப்பைப்புறக்கணித்து

# இன்று மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம்

## சனாதிபதி சில கடும் முடிவுகளை எடுக்கலாம்

(கொழும்பு)

**சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சம்மதம் பெறாமலே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை இன்று வெளியிட அக்கட்சியின் சனாதிபதி வேட்பாளரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன**

மேலும் அச்செய்திகள் தெரிவிக்கையில், அவ்வாறு அவர் தேர்தல் விஞ் ஞாபனத்தை வெளியிட்டால் எதிர் வரும் 24 ஆம் திகதி ச்னாதிபதி சந்திரிகாவுக்கும் ரணில் விக்கிரம சிங்கவுக்குமிடையிலான சந்திப் பையடுத்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடுமையான முடிவை அறிவிக்கலாம் எனவும் தெரிவிக் கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளுக்கு மாறானதாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் அநுரா நாளை மாலைதீவுக்குப் பயணம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் அநுராபண்டாரநாயக்க நாளை மாலைதீவிற்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அவர் மாலைதீவு சனாதிபதி அப்துல்கயூம், வெளிவிவகார அமைச்சர் அகமட்சாகீட் ஆகியோரைச் சந்திக்கவுள்ளார். சுற்றுலாப்பயணிகளுக்கான வசதிகளை அனுமதிப்பதற்கான வேலைத்திட்டம் பற்றி அநுரா பணடாரநாயக்க மாலைதீவு சுற்றுலா அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அநுராபண்டாரநாயக்க மகிந்தராஜபக்ஷவுக்கு ஆதரவாக மேடையில் பிரச்சாரம் செய்யாவிட்டாலும் எதிராக அல்லது அவருக்கு கிடைக்கப்போகும் வாக்குகளைத் தடுக்கும் வகையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிப்பதை நிறுத்த வேண்டும். அல்லது

(12 ஆம் பக்கம் பார்க்க

— இலக்கத்தகடற்ற உந்துருளியில் சென்றோர் —

## புத்தளம் சோதனைச்சாவடியில் பொலிசாரைச் சுட்டுவிட்டு தப்பி ஓட்டம்

(கொழும்பு)

புத்தளம் மன்னார் வீதியில் உந்துருளியில் வந்தவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தினால் சிறிலங்காப் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்றிரவு ஏழு முப்பது மணியளவில் நடைபெற்றதாகக்கூறப்படும் இந்தச்சம்பவத்தின்போது இலக்கத்தகடின்றி வந்ததாகக் கூறப்படும் உந்துருளியை வீதிச்சோதனை நடவடிக்கை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதேசமட்டத்தில் இராணுவம்-புலிகள் நேரடியாக பேசுவதன் மூலம் கொலைகளை நிறுத்த முடியும்

*—போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர் தெரிவிப்பு*

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையே நேரடிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற வேண்டும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. பிரதேச மட்டத்தில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளின் தளபதிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதன் மூலமே இப்பகுதிகளில் இடம்பெற்றுவரும் படுகொலைகளைத் தடுத்துநிறுத்த முடியும் என்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள சூழ்நிலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சண்டே லீடர் பத்திரிகை நிறுவனம் தாக்கப்பட்டு தீவைத்து எரிப்பு

*—அத்துமீறிய குழுவினர் கைவரிசை*

சண்டே லீடர் பத்திரிகை அலுவலகத்தினுள நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நுழைந்த ஆயுதக்குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது. சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க இச்சம்பவம் குறித்துக் கூறியதாவது, இரத்மலானையில் உள்ள சண்டே லீடர் அச்சகத்திற்குள் நுழைந்த ஏழு பேர் கொண்ட குழுவினர் அத்துமீறி நுழைந்தனர். அங்கிருந்த செய்தித் தாள் கட்டுக்களுக்கு தீவைத்த அக்குழு கடமையில் இருந்த ஊழியர்களையும் அச்சுறுத்தி விட்டுச்சென்றுள்ளது என்றார்.

## இந்தியாவில் தேடப்படும் குற்றவாளியாக சிறிலங்காவின் சமாதான நீதிபதி

சிறிலங்காவில் சமாதான நீதிபதி குடுலால் எனப்படும் லால் பீரிசை இந்திய அரசாங்கம் போதைப்பொருள் கடத்தல் குற்றத்திற்காகத் தேடுவதாக அறிவித்துள்ளது. சிறிலங்காவின் போதைப்பொருள் தடுப்புப்பிரிவினருக்கு இந்தியப் பொலிசார் இது தொடர்பில் தகவல் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து நாட்டை விட்டு குடுலால் எனப்படும் லால் பீரிஸ் தப்பியோடாமல் தடுப்பதற்காக சிறிலங்கா விமானநிலைய அதிகாரிகள் தீவிர அவதானிப்பில் இருக்க உத்தரவிடப்பட்டுள்ளது. போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் குடுலால் எனப்படும் லால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறைகள் 90 ஆக உயர்வு

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் வன்முறைகள் 90ஆக உயர்ந்துள்ளன. தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டதாக 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டோரில் பெரும்பான்மையானோர் கொழும்புப் பிரதேசத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் செயலகத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்தின தெரிவித்துள்ளார்.

பாதாளஉலகக் குழுவைச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயில் புதிய கூட்டணி அரசு பதவி ஏற்பு பிரதமராக ஸ்ரோல்ரன் பேர்க் அபிவிருத்தி அமைச்சராக எரிக்

(ஒஸ்லோ)

நோர்வேயில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலின் அடிப்படையில் புதிய கூட்டணி அரசாங்கம் பதவி ஏற்றுள்ளது.

இதில் தொழிற்கட்சி, அக்றேறியன் கட்சி, சோசலிச இடதுசாரிக் கட்சி ஆகியன இணைந்து அமைச்சரவையை அமைத்துள்ளன.

முதலாவது பெரியகட்சியான தொழிற்கட்சியைச் சேர்ந்த பத்து அமைச்சர்களும், இரண்டாவது பெரியகட்சியான சோசலிச இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த ஐந்து அமைச்சர்களும், மூன்றாவது கட்சியான அக்றேறியின் கட்சியைச் சேர்ந்த நான்கு அமைச்சர்களும் நேற்று முன்தினம் பதவி ஏற்றுள்ளனர்.



ஸ்ரோல்ரன் பேர்க் | ஜோனர் கட் ஸ்டோர் | எரிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 24 தமிழ் இளைஞர் மாத்தளையில் கைது

மாத்தளை மகாவெல கவுடுபெலல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் வவுனியாவைச் சேர்ந்த நால்வர் உட்பட 24 தமிழ் இளைஞாகள் கைது செய்யப்பட்டுள்ளணர்.

கவுடுபெலல்ல தோட்ட வீடமைப்புத் தொகுதியில் இந்தத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சந்தேக நபர்களிடமிருந்து டொல்பின் ரக வானொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த தேடுதலின்

(12 ஆம் பக்கம் பார்க்க

# வரிவிளம்பரம்

## காணி விற்பனைக்கு

கிளி.A9 பிரதான வீதிக்கருகில் அமைந்துள்ள இந்துபுரம் கிராமத்தில் ஒரு ஏக்கர் வீட்டுக்காணி விற்பனைக்கு உள்ளது என்பதுடன் இக் காணியின் முன்புறத்தில் விற்பனைக்கான விளம்பரப் பலகை இடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்புகளுக்கு:-
V.R.T. கட்டடம்,
கரடிப்போக்கு,
கிளிநொச்சி.
T.P-021 2285950. (6846)

## தவறிவிட்டது

வேலுப்பிள்ளை அம்பலவாணன் என்பவரது தேசிய அடையாள அட்டை, கைப்பை என்பன கோவிந்தன்கடைச் சந்திக்கும் திருவையாறு இரண்டாம் பகுதிக்கும் இடையில் 10.10.2005 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகிறார். (6855)

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள இரண்டு இஞ்சின்கள் England Lister (16hp, 12hp ) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு சுதா அரைக்கும் ஆலைபுளியடிச்சந்தி விசுவமடு. (6858)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

புகைப்படத்துறையில் புதிய நுட்பங்களை உருவாக்கக் கூடிய

**Adobe Photoshop**

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

தொடர்புகளுக்கு:-
வின்நெற் கணணி பயிற்சிநிலையம்,
டிப்போவீதி,கிளிநொச்சி. (சி.13074)

## தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை ரங்கநாதன் என்பவரின் உந்துருளிப் புத்தகம் NP. MC. 6868 (ஆவணம்) 13.10.2005 அன்று முகமாலை கட்டைக்காடு பேருந்தில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது உடுத்துறை வடக்கு தாளையடி T.P.077 6944931 எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகவல் க.ரங்கநாதன் (சி.6856)

# வைத்தியசாலைக்கு உதவி

சாவகச்சேரிநகர வைத்தியசாலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் ஒரு இலட்சம்ரூபாவிற்கு மேற்பட்ட மதிப்புடைய மருத்துவ உபகரணங்கள் வழங்கியிருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவ்மருத்துவ உபகரணங்கள் புலம் பெயர்ந்த உறவுகள் மூலம் பெறபட்டு மருத்துவ மனைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# கரைச்சிப் பிரதேச செயலகத்தின் காணி அலுவலக நடமாடும் சேவை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தினால் நடமாடும் சேவை மூலம் காணி சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இன்று கனகாம்பிகைக்குளம் பொது மண்டபத்தில் வைத்து கனகாம்பிகைக்குளம் கிராமமக்களுடைய காணி சம்பந்தமான விசாரணைகள் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை நடை பெறவுள்ளதெனவும். அதே போன்று எதிர்வரும் 20 ஆம் திகதியன்று கோணாவில் கிராமமக்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் கோணாவில் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் வைத்து அன்றையதினம் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை நடைபெறவுள்ளதென கரைச்சிப் பிரதேச செயலகக் காணி அலுவலர் செ. ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார். (சோ)

## நிரந்தரமின் இயக்குநரை நியமிக்கும்படி கோரிக்கை

நெடுந்தீவு பிரதேச மின்சாரநிலையத்திற்கு இயக்குநர் ஒருவரை நிரந்தரமாக நியமிக்கும்படி பொது மக்கள் சம்பந்தப்பட்டோரை கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. நிரந்தரமான மின்இயநதிர இயக்குநர் இன்மையால் சீரான மின்சாரத்தைப் பெற முடியாமல் பொது மக்கள் தொடர்ந்து நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் எனவே நெடுந்தீவுக்கென நிரந்தரமாகவே மின் இயக்குநர் ஒருவரை நியமிக்கும் படி நெடுந்தீவு பிரதேச மக்கள் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)



வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை மட்ட கணிப்பீட்டு தின நிகழ்வில் அதிபர் திருமதி. எல்.எப் நடேசமூர்த்தி உரையாற்றுவதை படத்தில் காணலாம்.
படப்பிடிப்பு:- ஆறு.சுபாஸ்கரன்

# யோகர் சுவாமிகள் திருவடி நிலைய எட்டாம் ஆண்டு நிறைவு விழா

(அலுவலக செய்தியாளர்)

வன்னேரிக்குளம் ஐயனார்புரம் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தின் எட்டாம் ஆண்டு நிறைவு விழாவும், முதியோர் தின நிகழ்வும் முதியோர் இல்லஸ்தாபகர் தின நிகழ்வும், நாளை பிற்பகல் 2.00 மணிக்கு நடை பெறவுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் தலைமையில் ஐயனார்புரம் முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் முதியோரைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து முதியோரை கௌரவித்து கலை நிகழ்வுகளைக் கண்டுகளிக்கும் வண்ணம் முதியோர் இல்ல செயலர் டாக்டர் ச.முருகானந்தம் கேட்டுக்கொண்டுள்ளார். (சோ)

# துணுக்காய் பிரதேசத்தில் கட்டாக் காலி கால் நடைகள்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லைகளால் பிரயாணங்களை மேற்கொள்வோர் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

துணுக்காய் பிரதேசத்தில் மல்லாவி நகர்ப் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகள் பிரதான வீதிகளில் தங்கி வருவதால் இரவில் பிரயாணங்களை மேற்கொள்வோர் பல சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். பலர் காயங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். இந்த வகையில் கால்நடை வளர்ப்போர் பண்ணையாளர்கள் தங்களின் கால் நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொது மக்கள் கோரியுள்ளனர். (24)

# நயினாமடுவில் கண்பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

(அலவலக செய்தியாளர்)

நெடுங்கேணி நயினாமடு தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையில் எதிர்வரும் 25 ஆம்திகதி செவ்வாய்க்கிழமையன்று வெளிநாட்டு கண் வைத்திய நிபுணர்களினால் கண்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மூக்குக் கண்ணாடிகளும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. எனவே அன்றையதினம் கண் பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டியவர்கள் சமுகம் கொடுத்து பயன்பெறும் வண்ணம் தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை மருத்துவப் பிரிவினர் வேண்டியுள்ளனர். (சோ)

## மீளப்பெறப்படாத பொருட்களை ஏலத்தில் விற்க நீதிமன்றம் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்றத்தால் கைப்பற்றப்பட்டு மீளப் பெறப்படாத பொருட்களை ஏலத்தில் விடமுடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டு இதுவரை மீளப்பெறப்படாத பொருட்களை அடுத்த மாதம் 26 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஏலம்விட நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாக யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா அறிவித்துள்ளார்.

ஏலவிற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பதிவாளரின் அனுமதியுடன் பொதுமக்கள் பொருட்களைப் பார்வையிடலாம் என்றும் குறிப்பிட்ட பொருள் தமது என்று உரிமை கோருமிடத்து தனது கோரிக்கையை அரை மணித்தியாலத்திற்கு முன்னர் நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் விற்கப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன்செலுத்தி உடனடியாக நீதிமன்ற வளவில் இருந்து அப்பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

# வடக்கு உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் காலம் கடந்த பிறப்பு இறப்பு பதிவு

(யாழ்ப்பாணம்)

காலம்கடந்த பிறப்பு இறப்பு பதிவுகளை வடக்கு வலய உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பொதுமக்கள் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாக வடக்கு கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் சதாசிவம் ஐயர் தெரிவித்துள்ளார்.

வாரத்தில் செவ்வாய்க்கிழமை காலை ஒன்பது மணி தொடக்கம், 12 மணிவரை பதிவுகளை பொதுமக்கள் மேற்கொள்ள முடியும். எனவே இதன் போது மக்கள் உரிய ஆவணங்கள் அதன் நிழற்படப் பிரதிகள் என்பனவற்றை சமர்ப்பிக்க வேண்டும். காலம் கடந்த பிறப்பு, இறப்புக்களை பதிவு செய்தல் தொடர்பான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க மக்கள் கஷ்டப்படுவதை தவிர்க்கவே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாகவும் மக்கள் உரிய முறையில் பயன்படுத்தி பயன் அடையும்படியும் அவர் தெரிவித்துள்ளார்.(28)



வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய சிறுவர் பூங்கா திறப்புவிழா நிகழ்வில் கலந்து கொண்ட வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். படப்பிடிப்பு:- ஆறு.சுபாஸ்கரன்

# முக்கிய அறிவித்தல்

## பொது நிகழ்வுகள், கூட்டங்கள், திருவிழாக்கள் நடாத்துவதற்கான அனுமதி

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கிளிநொச்சி நகரிலும், அதனை அண்மித்துள்ள கிராமங்களிலும் பிரதான வீதிகளுக்கருகாமையிலும் அமைந்துள்ள நிறுவனங்கள், திணைக்களங்கள், பொதுஅமைப்புக்கள், ஆலயங்கள், கோவில்கள் ஆகியவற்றில் பொது நிகழ்வுகள், திருவிழாக்கள், கூட்டங்கள் நடாத்துவதற்கான முன் அனுமதியினை கரைச்சிப் பிரதேச சபையில் பெற்று அவற்றை நடாத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இவை நடாத்துவதற்கான ஒழுங்குமுறை, நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தப்படிவத்தில் கையொப்பமிட்டு அதற்கான கட்டணத்தைச் செலுத்தி அனுமதி பெறப்படவேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**விசேட ஆணையாளர்,**
**கரைச்சிப் பிரதேசசபை.**

(சி.13043)

ஒக்ரோபர் வாசிப்பு மாதம்
பாடசாலை நூலகம் கல்வித் திட்டத்துடன் இணைக்கப்பட வேண்டாமா?...
வாசியுங்கள்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு
வருடாந்தச்சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு
AHAVILI,3,Torrington Vvenue,colombo-7,Srilanka,
TEL:011-2506272 E-MAIL:ahavili @ Viluthu.org

# நாளை நடைபெறும் வழக்கு விசாரணையில்
# சதாமுக்கு மரண தண்டனை கிடைக்கலாம்?

## -முன்னாள் துணைப் பிரதமர் அரசதரப்பு சாட்சியாகிறார்

(பாக்தாத்)

**ஈராக்கில் 143 பேர்படுகொலை செய்யப்பட்ட வழக்கில் ஈராக் முன்னாள் துணைப் பிரதமர் தாரிக் அஜீஸ் அரசதரப்பு சாட்சியாக மாறி முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறார். இந்த வழக்கு விசாரணை நாளை தொடங்குகிறது. இதில் சதாமுக்கு மரண தண்டனை கிடைக்கும் என்று கூறப்படுகிறது.**


சதாம்

அமெரிக்கப் படையெடுப்பைத் தொடர்ந்து ஈராக் ஆட்சியைத் துறந்து தப்பி ஓடிய அதிபர் சதாம் ஹுசைன் பின் அமெரிக்க இராணுவத்தால் கைது செய்யப்பட்டார். தற்போது அவரும் அவரது கூட்டாளிகளும் விசாரணைக் கைதிகளாக காவலில் வைக்கப்பட்டு உள்ளனர்.

சதாம் ஹுசைன் மீது ஏராளமான கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் ஒன்று தன்னைக் கொல்லச் சதித் திட்டம் தீட்டியதாகக் கூறி 1982 ஆம் ஆண்டு 143 பேரை படுகொலை செய்ய உத்தரவிட்டதாகும் சதாம்ஹுசைன் மீது விசாரணை நடத்த அமைக்கப்பட்ட தனி நீதிமன்றில் இந்த வழக்குத்தான் முதலில் விசாரணைக்கு வருகிறது விசாரணை நாளை புதன்கிழமை தொடங்குகிறது.

சதாம் ஹுசைனுடன் அவரது அமைச்சரவையில் துணைப் பிரதமராக இருந்த தாரிக் அஜீசும் கைது செய்யப்பட்டுக் காவலில் இருக்கிறார். அவர் மீது பல்வேறு வழக்குகள் உள்ளன.

சதாம் மீதான வழக்கில் தாரிக் அஜீசை அரச தரப்பு சாட்சியாக்க அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கடந்த இரண்டு ஆண்டாக முயற்சி மேற்கொண்டனர். அதற்காக 300 முறை அவருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அது பலன் அளித்து விட்டது. அரச தரப்பு சாட்சியாக அஜீஸ் சம்மதித்துவிட்டார். இது தொடர்பாக அமெரிக்க இராணுவ அதிகாரிகளுக்கும் தாரிக் அஜீசுக்கும் இடையே எழுதாத ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

அதன்படி தாரிக் அஜீஸ் மீது சிறிய குற்றச்சாட்டுகள் மட்டும் சுமத்தப்படும் அவர் தனி நீதிமன்றத்தில் நிரபராதி என்று முறையிடுவார் அதைத் தொடர்ந்து அவருக்கு மூன்று ஆண்டுகளுக்குக்குறைவான சிறைத் தண்டனை அளிக்கப்படும் இந்த மூன்று ஆண்டுகளும் காவலில் இருந்த நாட்களாக கணக்கிடப்பட்டு அவர் விடுதலை செய்யப்படுவார்.

சதாம் ஹுசைன் மீதான வழக்கு விசாரணை முடிவடையும்போது தாரிக் அஜீஸ் விடுதலையாகி வெளியே வந்துவிடுவார் என்று கூறப்படுகிறது. தாரிக் அஜீஸ் மீது இரண்டு கொலை வழக்குகள் உட்படப் பல வழக்குகள் உள்ளன. தாரிக் அஜீஸ் அரச தரப்பு சாட்சியாகச் சம்மதித்த விபரத்தை அவரது சட்டதரணி பை இஜாஸ் ஆரீப் தெரிவித்ததாக சண்டே டெலிகிராப் பத்திரிகை செய்தி வெளியிட்டு உள்ளது. ஆனாலும் தாரிக் அஜீஸ் கடைசி நேரத்தில் முடிவை மாற்றலாம் என்றும் அவர் கூண்டில் ஏறி சாட்சியம் அளித்த பிறகுதான் எதையும் உறுதியாகக் கூற முடியும் என்று சொல்லப்படுகிறது.

# இஸ்ரேல், பலஸ்தீன எல்லைப் பகுதியில் முறுகல்நிலை
## வெவ்வேறு சம்பவங்களில் இருதரப்பிலும் நால்வர் பலி

(ஜெருசலம்)

நேற்று முன்தினம் இஸ்ரேலின் மேற்குக் கரைப்பகுதியில் இடம்பெற்ற இரு வெவ்வேறு தாக்குதல்களில் பலஸ்தீன இராணுவ உயர்அதிகாரி ஒருவரும் மூன்று இஸ்ரேலியர்களும் உயிரிழந் துள்ளனர். பலஸ்தீன ஆயுததாரி ஒருவர் நடத்திய துப்பாக் கிச் சூட்டில் மூன்று இஸ்ரேலியர்கள் கொல்லப்பட் டுள்ளனர். இதேவேளை மேற்குக் கரையின் மற்றுமொரு பகுதியில் இஸ்ரேலியத் துருப்புக்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பலஸ்தீன இராணுவ உயர்அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எதிர்பார்த்த நேர்முகமான காரியங்களை முன்கொண்டு செல்வதற்கு பலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்குமிடையே இடம்பெறும் வன்முறைகளும் பழிவாங்கல்களும் ஒரு போதும் உதவப்போவதில்லையென பலஸ்தீனத்தின் திட்டமிடல் அமைச்சர் தெரிவித்துள்ளார். பலஸ்தீனத்தின் இராணுவம் இஸ்ரேலியர்களுக்கெதிரான மிலேச்சத்தனமான தாக்குதல்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். மேற்குக் கரை காஸாப் பகுதியிலிருந்து யூதக் குடியேற்றங்கள் அகற்றப்பட்ட நாள்முதல் அங்கு வன்முறைகள் அதிகரித்த வண்ணமுள்ளன.

பிந்திக்கிடைத்த தகவல் ஒன்றின்படி இஸ்ரேல், பலஸ்தீன அதிகார சபையுடனான பாதுகாப்பு தொடர்புகளை இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.


ஜெருசலேமின் தெற்குப்பகுதியில் நேற்று முன்தினம் பலஸ்தீனத் தீவிரவாதிகளின் துப்பாக்கித தாக்குதல் நடைபெற்ற இடத்தில் இஸ்ரேலிய சிப்பாய்கள் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

# அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பவர்களுக்கு
# இருதய நோய் ஏற்படும் அபாயம்

தொடர்ந்து ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு தொலைக்காட்சி பார்ப்பதால் உடல் பருமனாகிறது இருதயத்திற்கு கேடு விளைவிக்கும் கொழுப்புகள் இரத்தத்தில் அதிகமாகச் சேருகிறது என்கிறார் பிரபல இருதய அறுவைச் சிகிச்சை மருத்துவர் ஆர்.முரளிதரன்.

தொலைக்காட்சி பார்ப்பதால் ஒருவருடைய உணவுப் பழக்கத்தில் மாற்றம் ஏற்படுகிறது. தொலைக்காட்சி விளம்பரத்தில் வரும் சில உணவுப் பொருட்கள் குழந்தைகள் மனதில் ஆழப்பதிக்கின்றன. அவைகளை உண்ண வேண்டும் என்ற ஆசையைத் தூண்டுகின்றன. குழந்தைகள் சந்தோசமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பெற்றோர்களும் அவற்றை வாங்கிக் கொடுத்து விடுகின்றனர். இந்தத் துரித உணவுகள் அனைத்தும் உடல் நலத்திற்கு கேடானவை என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஆர்ஜென்டீனா சிறையில் கலவரம்
# 32 கைதிகள் பலி; 100 பேரிற்கு மேல் காயம்

ஆர்ஜென்டீனா தலைநகர் புவனர்ஸ் அயர்ஸ் நகரை அடுத்துள்ள மக்டா லினா சிறையில் இரணடாயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டு இருந்தனர்.

நேற்று முன்தினம் இரவு இந்தச் சிறையில் திடீர் கலவரம் ஏற்பட்டது. கைதிகளைப் பார்க்கவரும் பார்வையாளர்களுக்கு நீண்ட நேரம் ஒதுக்க வேண்டும் என்று கைதிகள் வற்புறுத்தி வந்தனர். ஆனால் இதை சிறைக் காவலாளிகள் ஏற்கவில்லை. இதைத் தொடர்ந்து கைதிகள் கலவரத்தில் ஈடுபட்டனர்.

கைதிகளைப் பார்க்க வந்தவர்களும் ரகளையில் ஈடுபட்டனர். அப்போது பொலிசாருக்கும், கைதிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. கலவரத்தில் ஈடுபட்ட கைதிகள் சிறைக்குத் தீ வைத்தனர். கையில் கிடைத்த பொருட்களை தீயில் போட்டு எரித்தனர். இதைத் தொடர்ந்து விஷவாயு பரவியது.

இந்த மோதலிலும், தீயில் கருகியும் பொலிசார் துப்பாக்கியால் சுட்டதிலுமாக 32 கைதிகள் பலியானார்கள். 100இற்கும் மேற்பட்ட கைதிகள் காயமடைந்தனர். மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட கைதிகளில் பலரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளன.


சீனா விண்வெளிக்கு 'ஷென்சோவ் –6' என்ற விண் கலத்தை அனுப்பியது. இந்த விண்கலத்தில் பீ ஜுனிலாங், நீ ஹெய் செங் என்ற இரண்டு விண்வெளி வீரர்களும் சென்றனர். ஐந்து நாட்கள் விண்வெளியில் சுற்றி வீட்டு இரண்டு வீரர்களும் அந்த விண்கலத்தின் மூலம் நேற்றுக் காலை பூமிக்கு திரும்பினார்கள். சிசிவாங் தளத்தில் இறங்கிய அந்த இரண்டு வீரர்களும் வெற்றிக் களிப்பில் கை அசைக்கும் காட்சி.

# நாடுதிரும்பிய ஈகுவடோர் முன்னாள் அதிபர்
# விமான நிலையத்தில் வைத்து கைது

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஈகுவடோரில் கடந்த ஏப்ரல் மாதம் அரசுக்கு எதிராக மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து அதிபர் லூசியோ கூட்டியரங் பதவி விலகினார்.

குடும்பத்துடன் அவர் கொலம்பியா நாட்டுக்கு தப்பிச்சென்று விட்டார். இதைத் தொடர்ந்து ஈகுவடோர் நாட்டில் புதிய ஆட்சி அமைக்கப்பட்டது. பதவி விலகி தப்பி ஓடிய அதிபர் மீது ராஜதுரோகம் மற்றும் ஊழல் வழக்குகள் தொடரப்பட்டன.

இந்த நிலையில் முன்னாள் அதிபர் லூசியோ கொலம்பியாவில் இருந்து தனிவிமானம் மூலம் சொந்த நாட்டுக்குத் திரும்பினார். அவர் விமானத்தை விட்டு வெளியே வந்ததும் தயாராக நின்ற பொலிசார் அவரைக் கைது செய்தனர். அவரை ஒரு உலங்குவானூர்தியில் அங்குள்ள சிறைச்சாலைக்குக் கொண்டு சென்று அவரைச் சிறையில் அடைத்தனர்.

முன்னதாக மாண்டா விமான நிலையத்தில் அவரது ஆதரவாளர்கள் ஏராளமானவர்கள் கூடி நின்று பொலிசாருக்கு எதிராகக் கோஷம் போட்டனர். பொலிசார் தடியடி நடத்தி அவர்களைக் கலைத்தனர்.


பூகம்பம் ஏற்பட்ட காஷ்மீர் பகுதியில் இராணுவத்தினர் கொடுத்த உணவைப் பெற்றபின் தாயின் வரவிற்காய் காத்திருக்கும் பிள்ளை.

# காஷ்மீரில் ஏற்பட்ட பூகம்பத்தால்
# இமயமலை நதிகள் மாற்றமடைய வாய்ப்புள்ளது

## -"இஸ்ரோ"நிறுவன விஞ்ஞானி தகவல்

காஷ்மீரில் ஏற்பட்ட பூகம்பத்தால் இமய மலைப் பகுதியில் நதிகளில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) மூத்த விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

"இஸ்ரோ" நிறுவனத்தின் மூத்த விஞ்ஞானி பி.எஸ்.தாக்கர் சமீபத்தில் மத்திய பிரதேச அறிவியல் தொழில் நுட்ப மையத்தில் ஆய்வறிக்கை தாக்கல் செய்துள்ளார். அதில் வேத காலத்தில் இருந்த சரஸ்வதி நதி நிலவியல் மாற்றங்களால் மறைந்து விட்டதாகக் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறியதாவது;

பூகம்பம், எரிமலை வெடிப்பது மற்றும் நிலவியல் மாற்றங்கள் காரணமாக அந்தப் பகுதியில் இருக்கும் நதிகளில் மாற்றம் ஏற்படும். நிலவியல் மாற்றங்கள் காரணமாகத்தான் வேத காலத்து புனித நதியான சரஸ்வதி நதி ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் மறைந்து போனது. சரஸ்வதி நதி ஓடிய பாதைக்கான அடையாளங்கள் இன்னும் உள்ளன.

காஷ்மீரிலும், பாகிஸ்தானிலும் சமீபத்தில் ஏற்பட்ட பூகம்பத்தால் இமயமலைப்பகுதியில் கங்கை, சிந்து நதிகளில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனினும் ஒவ்வொரு நிலவியல் மாற்றத்தின் போதும் அப் பகுதியில் உள்ள நதிகளில் மாற்றம் ஏற்படவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. குஜராத்தில் கட்ச்,காம்பே வளைகுடாக்கள் இருக்கும் பகுதியில் ஒரு காலத்தில் கடல் மட்டம் மிகவும் குறைவாக இருந்தது. நிலவியல் மாற்றங்களால் அங்கு வளைகுடாக்கள் ஏற்பட்டன எனத் தெரிவித்தனர்.

# ஜப்பானில் பூமி அதிர்வு

(டோக்கியோ)

நேற்றையதினம் ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் பூகம்பம் ஏற்பட்டது. இதனால் கட்டடங்கள் குலுங்கின. இருந்தபோதிலும் சுனாமி உருவாகும் ஆபத்து இல்லை.

இதன் மையம் பூமிக்கு அடியில் 40 கி.மீ கீழே மையம் கொண்டு இருந்தது. இதன் வீரியம் 5.1 ரிச்டர் அளவாக இருந்தது.

பூகம்பம் ஏற்பட்டபோது டோக்கியோவிலும், அதன் புறநகர் பகுதிகளிலும் ரயில்கள் வழக்கம்போல் ஓடின. ஆனால் மெதுவாகச் சென்றன.

விமான நிலையங்களிலும் வழக்கம்போல போக்குவரத்து இருந்தது.

5.1 ரிச்டர் அளவிலேயே பூகம்பம் இருந்ததால் சுனாமி உருவாகும் ஆபத்து இல்லை. அதனால் சுனாமி எச்சரிக்கை விடபபடவில்லை.

உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

உலகில் ஏற்படும் பூகம்பங்களில் 20 சதவீதம் ஜப்பானில்தான் ஏற்படுகின்றன. ஆண்டுதோறும் ஜப்பானில் 2000 பூமி அதிர்வுகள் ஏற்படுவதாக ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.



திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படாத முக்கிய வீதியான கிளிநொச்சி பிரதேச சபைக்கு பின்புறமாகவுள்ள நாற்சந்தி வீதியில் உள்ள குன்றுகளில் தற்போது மழை நீர் தேங்கி நிற்பதனையும் மேற்படி இவ்வீதியூடாக மக்கள் பலத்த சிரமங்களின் மத்தியில் பயணங்களை மேற்கொண்டு வருவதனையும் படத்தில் காணலாம். (படம்–சோதி

# மீள் குடியமர்வு கொடுப்பனவை பெறாதோர் கவனத்திற்கு!

மன்னார் மாவட்டத்தில் நிகொட் திட்டத்தின் கீழ் இது வரையிலும், 8826 குடும்பங்கள், மீளக்குடியமர்ந்து ரூபா 25 ஆயிரம் பெற்றுள்ளார்கள். ஆனால் இந்தத் திட்டம் 2005 மார்கழி 31 ஆம் திகதியுடன் முடிவடைவதால் உடனடியாக ஏற்கனவே மீளக் குடியமர்ந்த பத்தாயிரம் குடும்பங்களில் மீளக் குடியமர்வுப் பணம் பெறாத குடும்பங்கள் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு மன்னார் மாவட்ட திட்டப் பணிப்பாளர் அ.பத்மநாதன் சகல பிரதேச செயலாளர் ஊடாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# எமது விடுதலைப் போராட்டத்திற்கான இறுதி இலக்கை நாமே எட்ட வேண்டும்

## மட்டு. பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன்

(மட்டக்களப்பு)

**தமிழ் மக்களாகிய எமக்கு சர்வதேச சமூகமோ, சிறிலங்காப் பேரினவாத அரசோ விடுதலைப் போராட்டத்திற்கான இறுதித் தீர்வைப் பெற்றுத் தரப்போவதில்லை. நாமே எமது இலக்கை அடைய வேண்டும்.இதற்கு அனைத்துத் தமிழ் உறவுகளும், பலமாக இருக்க வேண்டும். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.**

அரசடித்தீவு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தினர் மாவீரர்களின் நினைவாக நடாத்திய விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வு நேற்று முன்தினம் கழகத்தின் உப தலைவர் தி.சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற போது அவர் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:- சிறிலங்காப் பேரினவாத அரசு நடைபெறவிருக்கும் தேர்தல் பற்றியே சிந்தித்து செலவு செய்து கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களின் பிரச்சினையைப் பற்றி சற்று எண்ணிப்பார்க்காத வகையில் இருக்கின்றது.

தமிழ் மக்களாகிய எமக்கு யார் சனாதிபதியாக வந்தாலும், எமது பிரச்சினையைத் தீர்க்கப்போவதில்லை. மாறாக எமது மக்களை ஏமாற்றிக்கொண்டே செல்வார்கள். நாம் சுயநிர்ணய உரிமையைப் பெற்றெடுத்து சுயமாக வாழ வேண்டுமானால் பலமாக இருக்க வேண்டும். தேசியத் தலைவர் எமது விடுதலைப் போராட்டத்தை புத்தி சாதுரியமான முறையில் கொண்டு செல் கிறார். இதற்கு தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஊன்று கோலாக இருக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலே வீரகாவியம் படைத்த மாவீரர் செல்வங்களை நினைவு கூர்ந்து இவ்வாறு விளை யாட்டுக்கள் நடாத்து வதையிட்டு கூட்டமைப்புச் சார்பாக நான் பெருமிதமடைகிறேன். இன்றைய நிலையில் நாம் மாவீரர்களின் தியாகத்தினால் தான் நாம் இவ்விடத்தில் சுதந்திரமாக இருக்கின்றோம். இதன் பெருமை அவர்களையே சாரும் என்றே கூறலாம்.

சிறிலங்கா அரசு நாளுக்கு நாள் தனது செயற்பாட்டினை மாற்றிக் கொண்டு செல்கின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண இடைக்கால தன்னாட்சி அதிகார சபையினைக் கேட்ட போது அரசு மறுத்தது பின்பு சுனாமிப் பொதுக் கட்டமைப் பினை நிறுவுவதற்கும் அரசு மறுத்தது. இப்போது கதிர்காமரின் கொலைக்குப் பின்பு மீண்டும் அவசரகாலச் சட்டத்தினைப் பிரகடனம் செய்துள்ளது.

இந்நிலையினைப் பார்க்கும் போது தமிழ் மக்கள் தமக்கான சுயநிர்ணய உரிமையை நாமே பலமாக இருந்து பெற வேண்டும் எனக் கூறினார்.

# சுனாமியால் பாதிப்புற்ற மீனவர்களில் ஒரு பகுதியினருக்கு படகுகள் வழங்கல்

(முல்லை)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மீனவர்களில் ஒரு தொகுதியினருக்கு கெயார் நிறுவனத்தின் அனுசரணையுடன் 55 படகுகள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

முற்பகல் 11.45மணிக்கு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் வைத்து படகுகள் வழங்கப்பட்டன.

சமாசத் தலைவர் மரியராசா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை கெயார் நிறுவனப்பிரதி நிதிகளான நெக்லக், கிறேசிகலி ஆகியோர் ஏற்றினார்கள். தமிழீழத் தேசியக் கொடியை முல்லை நகர கடற்புலிகளின் தளபதி க.தினேஷ் ஏற்றினார். கருத்துரைகளை தினேஷ், கெயார் நிறுவன இணைப்பாளர் கணேசலிங்கம் கெயார் நிறுவனப் பிரதிநிதி கிறேசிகலி ஆகியோர் வழங்கினார்கள்.

தொடர்ந்து படகுகளை வருகை தந்திருந்த கெயார் நிறுவனப் பிரதிநிதிகள், தினேஷ் ஆகியோர் வழங்கினார்கள்.

இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களில் ஒரு தொகுதியினருக்கு அங்கிலிக்கன் திருச்சபையின் நிதியுத வியில் 12 படகுகளும் 12 வெளியிணைப்பு இயந்திரங்களும் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது. (20)

# வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி ஆண்டு நிறைவு விழா

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் 12 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 3.00 மணிக்கு கல்லூரியின் பல நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிவிஸ்வநாதன், சிறப்பு விருந்தினராக கல்லூரி பீடாதிபதி பேர்ணாட் கௌரவ விருந்தினர்களாக கல்லூரி உப பீடாதிபதிகளான இன்ப தேவராஜா, சிதம்பரநாதன், இராஜகருணா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (10)

# பயனாளிகளுக்கு ரீடோ நிறுவனத்தால் துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பு

ரீடோ நிறுவனம் ஐ.எல்.ஒ நிறுவ னத்துடன் இணைந்து நடை முறைப் படுத்திவரும் தொழிற்பயிற்சியில் பங்குகொள்ளும் பயனாளிகள் 22 பேருக்கு துவிச்சக்கரவண்டிகளை வழங்கியுள்ளது.

இந் நிகழ்வு ரீடோ நிறுவனத் தலைமைப் பணிமனையில் அண்மையில் இடம் பெற்றது இந் நிகழ்வில் ஐ.எல்.ஓ நிறுவனத்தைச் சேர்ந்த ஜோசப் ரீடோ நிறுவன ஐ.எல்.ஓ திட்ட இணைப்பாளர் பிரகாஸ் ஆகியோர் துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்தனர்.

# அல்லி ராணிக் கோட்டையை பாதுகாக்க உதவுக

(மன்னார்)

மன்னார் அரிப்புப் பிரதேச அல்லி ராணிக் கோட்டை பராமரிப்பு குன்றி அழியும் நிலையிலுள்ளது. அதைப் பாதுகாக்க அப்பகுதி மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

மன்னாரிலுள்ள அரிப்பு பிரதேச வரலாற்று புகழ்மிக்க அல்லி ராணிக் கோட்டை தற்சமயம் கவனிப்பார் இன்றி கடல் அரிப்புக்கு உட்பட் டுள்ளது. இது தற்சமயம் இடிந்து விடும் நிலையிலுள்ளது.

இலங்கையிலுள்ள கோட்டைகள் யாவும், ஒல்லாந்தர், போர்த்துக்கேயர் போன்ற அந்நியரால் கட்டப்பட்டன. ஆனால் இந்த அல்லி ராணிக் கோட்டையானது தமிழ்பெண்ணான அல்லிராணியால் கட்டப்பட்டதாகும். இக்கோட்டையில் அல்லிராணி பயன்படுத்திய சுரங்கப் பாதை களுக்கான தடையங்களும், சான்று களும், அங்கு உள்ளன என்பது குறிப் பிடத்தக்கது எனவே கோட்டையைப் பாதுகாக்க வேண்டுகோள். விடுக்கப பட்டுள்ளது. (18)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் மேம்பாட்டிற்காக தேவைப்பகுப்பாய்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு முகாமைத்துவ பிரதேச அபிவிருத்தித் திட்டத் தின் கீழ் மாவிலங்கத்துறைக் கிராமத்தில் கண்டல் தாவரத்தை மீள்நடுகை செய்வதற்கும் மண்முனைக் கிராமத்தில் கண்டல் தாவரங்களை இடைவெளிகளில் நடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக சரீரம் திட்டப் பணிப்பாளர் எதிர்மன்ன சிங்கம் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் ஆரம்பக் கூட்டங்கள், நடாத்தப்பட்டு சில கிராமங்களில் மக்கள் பங்க ளிப்புடனான ஆய்வுக் கூட்டமும் வைக்கப்பட்டு மக்களின் பிரச்சினைகளையும், தேவைகளையும், இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

வேடர் குடியிருப்பு, புதுக்குடியிருப்பு, செல்வாநகர் கிழக்கு அம்மன்தனாவெளி ஆகிய நான்கு கிராமங்களில் கூட்டம் நடாத்தப்பட்டு மக்களின் தேவைகள் இனங்காணப்பட்டுள்ளன. இவ் வேலைத்திட்டங்கள் மட்டக்களப்பு நெக்டெப் அலு வலகத்தில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் திருகோணமலையில் இயங்கும் தலைமைக் காரியாலயத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றதும் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

அத்தோடு புதுக்குடியிருப்புதெற்கு செல்வாநகர் பாலமுனை, காயான்கேணி ஆகிய நான்கு கிராமங்களையும், அபிவிருத்தி செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கிராமத்திற்கும், தனித்தனியாக ரூபா ஐம்பது இலட்சம் செலவு செய்யப்படவுள்ளது.



பாண்டியன்குளம் துனுக்காய் பிரதேசங்களில் அனுமதியின்றி கிரவல் மண் அகழ்வதால் ஏற்படுகின்ற சூழல் பாதிப்பினை கருதாது சட்ட விரோதமாக மேற்படி பிரதேசங்களில் 16.10.2005 அன்று மாலை 6.00 மணிக்கு கிரவல் மண் ஏற்றிய ஐந்து டிப்பர் வாகனங்களை துனுக்காய் காவல் பணிமனையினர் தடுத்து வைத்ததுடன் அதற்கான சட்ட நடவடிக்கையினையும் மேற்கொண்டுள்ளனர். தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகன[illegible] படத்தில் காணலாம். (படம்–அன்ரனி)



புனரமைப்பு செய்யப்பட்ட திருநகர் வீதியில் அமைக்கப்பட்ட மதகு ஒன்று உடைந்த நிலையில் காணப்படுகிறது மிக அண்மையில் செப்பனிடப்பட்ட மேற்படி வீதியிலுள்ள இம் மதகு ஆனது முன்னரும் ஒருதடவை உடைந்து மீள மைக்கப்பட்டதாகும். அத்துடன் மதகிற்கு ஊடாக நீர் வெளியேற முடியாத முறையிலும் அமைக்கப்பட்டுள்ளது. (படம்–குகன்)

# சிறுவர் பொழுது போக்கு மையம் அமைப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் யுனிசெப் நிறுவன நிதியுதவியுடன் முல்லை. மாவட்ட உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தில் முல்லை. பிரதேச கரையோர 20 இடைத்தங்கல் முகாம்களிலும் உள்ள சிறுவர்களை ஒன்றினைத்து சிறுவர்களின் பொழுது போக்கிற்கு விளையாட்டு மைதானம் நூல் நிலையம் என்பன நிறுவப்பட்டு கிராம உத வியாளரின் ஒழுங்கு படுத்தலில் ஒவ்வொரு முகாம்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. (20)





கனடாவில் இடம்பெற்ற ''புயலாகும் புதுராகம்'' நிகழ்வில்.

படம்:- எழிலன்

# கானம் பாடும் வானம் பாடிகளின் ''புயலாகும் புதுராகம்'' நிகழ்வு

(ரொரன்ரோ)

**''புயலாகும் புதுராகம் –2005'' நிகழ்வு கனடாவில் சிறப்புற நடைபெற்றது. தாயகப் பாடல்களை 16 வருடங்களாக பாடிவரும் கானம் பாடும் வானம் பாடிகளின் 16 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமா இந் நிகழ்ச்சி நடைபெற்றது.**

முதல் நிகழ்வாக பொதுச் சுடரினை சிவா ஏற்றினார். தொடர்ந்து கனடாத் தேசியக் கொடியினை டி3 பொறுப்பாளர் தேவனும், தமிழீழ தேசியக் கொடியினை மேஜர் அன்னக்கிளியின் தந்தை விநாயகமூர்த்தியும் ஈகச்சுடரினை விஜயகுமார் குருக்களும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து அகவணக்கமும் அதைத் தொடர்ந்து விஜயகுமார் குருக்களின் ஆசியுரையும், சிந்துஜாவின் வரவேற்பு நடனமும், கலைஞர்களின் புரட்சிப் பாடல்களும் இடம் பெற்றன.

தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையால் அனுப்பி வைக்கப்பட்ட வாழ்த்தினை தமிழ்ச்சோலை அறிவிப்பாளர் நர்த்தனா வாசித்தார். தொடர்ந்து எஸ்.பி இம்போட்டன் தாபனத்தின் 100 டொலர் பெறுமதியான தளபாடம் அதிர்ஷ்ட இலாபத்திற்காக விற்பனை செய்யப்பட்டது.இந் நிதி நவம் அறிவுக்கூடத்திற்கு அனுப்பிவைக் கப்படவுள்ளது. (எ)

## கைக்குண்டுகளை வைத்திருந்த முஸ்லிம் பெண் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் வீடு ஒன்றில் இரண்டு கைக்குண்டுகளை மறைத்து வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் முஸ்லிம் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிசார் இவரது வீட்டிற்கு சென்றதாகவும் அங்கு இரண்டு கைக்குண்டு களையும் இந்தப் பெண் நிலத்தில் குழிவெட்டி புதைத்து மறைக்க முற்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

ஏற்கனவே கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ள தனது மகனினால் இவை தன்னிடம் தரப்பட்டதாக விசாரணையில் கைது செய்யப்பட்டிருக்கும் பெண் கூறியதாக பொலிசார் தெரிவித்தனர்.

மொகமட் காசிம் உம்மு நாச்சி (வயது42) என்ற இந்தப் பெண் மட்டக்களப்பு மேலதிக நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் முன் னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர் வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## மகிந்தவின் பாதுகாப்பு ஆலோசகருக்கு ஒரு இலட்சம் ரூபா ஊதியம்

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமரும் சுதந்திரக் கட்சியின் வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு ஆலோசகரான ஓய்வு பெற்ற லெப். கேணல் கொட்டபய ராஜபக்ஷவுக்கு ரூபா ஒரு இலட்சம் ஊதியம் வழங்க அமைச்சரவை ஒப்புதல் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா இராணுவத்தில் பணியாற்றிய கொட்ட பயராஜபக்ஷ நீண்ட காலமாக அமெரிக்ககாவீன் லொஸ் ஏஞ்சல்ஸ் கலிபோர்னியாவில் வசித்து வந்தார்.

சனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ நியமிக் கப்பட்டதும் சிறிலங்காவுக்கு அவர் திரும்பினார்.

இதனையடுத்து அவரைக் கூடுதல் அமைச்சரவைச் செய லாளர் தகுதியிலான பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்க மகிந்த முடிவு செய்தார். இதற்கான ஒப்புதலையும் சிறிலங்கா அமைச்சரவை அளித்துள்ளது.

## அரசாங்க வங்கி நியமனங்களுக்கு மாகாண மட்டத்தில் விண்ணப்பம்

### — இலங்கை வங்கி, மக்கள் வங்கி தலைவர்கள் உறுதி

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச வங்கிக் கிளைகளில் புதிய நியமனங்கள் இம் மாகாணத்திற்கென விசேடமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு வழங்கப்படும் என்று இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றின் தலை வர்கள் தம்மிடம் உறுதியளித்திருப்பதாகத் தமிழ் தேசியக் கூட்ட மைப்புப் பாராளுமன்றக் குழுவின் தலைவரும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித் தார்.அண்மையில் வடக்குக் கிழக்கில் அரச வங்கிகள், வடக் குக் கிழக்கு மாகாண தமிழ் பேசும் படித்த தகுதியான இளைஞர் யுவதிகளைப் புறக்கணிப்புச் செய்ததைக் கண்டித்து பாராளு மன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் சனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். பாராளுமன்ற உறுப்பினர் க. துரை ரட்ணசிங்கமும் நிதிஅமைச்சருக்கு கண்டனக் கடிதத்தை அனுப்பியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு வங்கி நியமனங்கள் வழங்கப்பட்ட அவ்வவ் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் புறக்க ணிக்கப்பட்டனர் என்பதை வலியுறுத்தியதுடன். நியமனம் வழங் கப்பட்ட வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை வேறு இடங் களுக்கு மாற்றிவிட்டு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு நியம னங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தார்.

வடக்குக் கிழக்கிலிருந்து விசேட மாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு அங்குள்ள வங்கிக்கிளைகளுக்கு நியமனம் வழங் கப்படும் என்றும், அதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படும் என்றும், வங்கிகளின் தலைவர்கள் தம்மிடம் உறுதியளித் தாகப் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார் உறுதிமொழி நிறைவேற்றப்படுவது குறித்து நாம் அவதானமாகப் பார்க்க வேண்டும் என்றும் சம்பந்தன் குறிப்பிட்டார். (25)

## வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி மட்டு. நகரில் விழிப்புலனற்றோர் ஊர்வலம்

(மட்டக்களப்பு)

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் மட்டக் களப்பிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

இத் தினத்தையொட்டி விழிப்புலனற் றோர்கள் கலந்து கொண்ட ஊர்வலம் மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரியில் இருந்து ஆரம்பமாகி கோட்டை முனைப்பாலம் மத்திய வீதி, வைத்தியசாலை வீதி ஆகிய வீதிகளை ஊடறுத்து நிகழ்வு இடம்பெறும் இடமான ஆனைப்பந்தி இராமகிருஸ்ணமிசன் பெண்கள் பாடசாலையை சென்றடைந்தது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வினை மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி வாழைச்சேனை ஆகிய லயன்ஸ் கழகங்கள், மட்டக்களப்பு தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலையும் இணைந்து நடாத்தினர்.

ஆனைப்பந்தி வித்தியாலயத்தில் விழிப்புலனற்றோர் பாடசாலை மாணவர்களி னால் கலை,கலாச்சார வில்லுப்பாட்டு, நடன நாடக நிகழ்வுகளும் இடம்பெற்றது.

பிரதம அதிதியாக வைத்தியர் ஜே.டி.சேவியர், லயன் மட்டுத் தலைவர் சட்டத் தரணி பி.பிறேம்நாத், லயன் களுவாஞ்சிக்குடி தலைவர் பி.சிறிதரன் தரிசன தலைவர் ஏ. ரவீந்திரன் செயலாளர் என்.இதயராஜன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## கிறிஸ்தவர்கள் எதிர்ப்பார்களானால் நுரைச்சோலை திட்டம் கைவிடப்படும்

### மகிந்த ராஜபக்ஷ உறுதி மொழி

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின்திட்டத்தை கிறிஸ்தவர்கள் எதிர்ப்பதாகக் கூறினால் அத் திட்டத்தை கைவிட தான் தயாராக இருப்பதாக சிலாபம் ஆயர் பிராங்க் மார்க்கஸ் பெர்னாண் டோவிடம் சிறிலங்கா பிரதமர் மகிந்தராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

சிலாபம் ஆயருக்கும் மகிந்தவுக்கும் கடந்த சனிக்கிழமை நடந்த தொலைபேசி உரை யாடலில் மகிந்த இந்த வாக்குறுதியை அளித் துள்ளார்.

நுரைச்சோலை திட்டம் தொடர்பாக இருவரும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டுள் ளனர்.

இந்த உரையாடலில் இத்திட்டத்தை பொது மக்கள் எதிர்ப்பதாக ஆயர் குறிப்பிட்டுள்ளார். இதற்குப் பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ கிறிஸ்த வர்கள இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தால் நுரைச்சோலை திட்டத்தை கைவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தனது தேர்தல் அறிக்கையில் அறிவிப்பதாக உறுதி கூறியுள்ளார்.

இதனிடையே எதிர்வரும் 24ஆம் திகதியன்று நுரைச்சோலை திட்டத்துக்கான கட்டுமானப் பணிகளை ஆய்வுசெய்ய மின்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த அப்பகுதிக்கு செல்ல உள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது.

## பெருமளவு சிறுபோக நெல் இவ்வாண்டு கொள்வனவு

(கொழும்பு)

சிறுபோக நெல் கொள்வனவு இந்த ஆண்டில் ஆகக்கூடிய அளவில் நடை பெற் றுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித் துள்ளது. 18 பிரதான நெல் உற்பத்தி மாவட்டங் களில் 64 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் 128 கோடி ரூபாவிற்கு அரசாங்கத்தினால் கொள் வனவு செய்யப்பட்டுள்ளது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 44 ஆயிரம் மெற்றிக்தொன் நெல்லையும், விவசாய கேந்திர நிலையங்கள் 17 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லையும், ஏனைய விவசாய அமைப் புக்கள் 2900 மெற்றிக்தொன் நெல்லையும், கொள்வனவு செய்துள்ளன.

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் மக்களுக்கு பழமரக் கன்றுகள் விநியோகம்

(மட்டக்களப்பு)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மட்டக்களப் பில் பெரிய புல்லுமலை, கோப்பாய் வெளிக் கிராம மக்களுக்கு பழமரக்கன்றுகள் விநி யோகிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் ஈழமாறன் தலைமையில் காலை 10.00 மணிக்கு புல்லு மலை பாடசாலையில் வைத்து இவை வழங் கப்பட்டன.இந் நிகழ்வில் குடும்பி மலை மத்திய கோட்டப் பொறுப்பாளர் , புல்லுமலை கிராம முன்னேற்ற சங்கத் தலைவர் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். ஒவ்வொரு குடும் பத்திற்கும் தலா மூன்று பழமரக் கன்றுகள் வழங்கப்பட்டன. இதே வேளை நேற்று முன்தினம் பிற்பகல் கோப்பாய் வெளி மக்களுக்கும் பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

# சட்டசபைத் தேர்தலுக்காக — முதல்வரின் வலைவீச்சு!

அ.கலைவாணி

தமிழகத் தேர்தல் எப்போது.... என்பதற்கு விடையினை தமிழகத்தேர்தல் ஆணையகம் கோடிட்டுக் காட்டியுள்ளது. அந்தவகையில் எதிர்வரும் ஏப்பிரல் கடைசியிலோ அல்லது மே ஆரம்பத்திலோ தமிழகத் தேர்தலை நடத்தி விடமுடியும் என்று தமிழகத் தேர்தல் ஆணையம் முடிவு செய்திருக்கின்றது.

இதனையடுத்து வெகுவிரைவில் தமிழகத் தேர்தல் களைகட்டக் கூடும் எனும் எதிர்பார்ப்பு எழுந்திருக்கின்றது. இதேவேளை ஏற்கனவே ஆளும் கட்சி தேர்தலுக்கான தமது சகல ஏற்பாடுகளையும் முடுக்கிவிட்டுள்ளது. எதிர்க்கட்சியும் ஆளும் கட்சிக்கு சளைக்காது தமது வியூகங்களையும் செயற்படுத்தாமல் இல்லை.

எனவே இன்னும் ஓரிருநாட்களிலோ வாரங்களிலோ தமிழகம் தேர்தலுக்காக தன்னை அலங்கரிக்கத் தொடங்கிவிடும். பிரச்சாரப் பீரங்கிகளால் அதிர்வுகள் ஏற்படுவதும், வன்முறை கலாச்சாரம் தலை விரித்தாடுவதும் கூட ஏற்படக் கூடும். ஏனெனில் தேர்தல் என்றாலே இவையெல்லாம் வழமையே என்று தான் காலம் காலமாக நிலவிவருகின்றது.

இதேவேளை தமிழகஅரசு ஏற்கனவே பலவிதமான சலுகைகளை தமிழக மக்களுக்கு அறிமுகம் செய்திருக்கின்றது.

* சுனாமி மறுவாழ்வுத்திட்டம்,வீட்டுவசதி மேம்பாடு, வாழ்நிலை மேம்பாடு, உட்கட்டமைப்பு சரி செய்தல், தொழிற்பயிற்சி வழங்கல் என்பவற்றிற்காக 1,852,74 கோடியில் திட்டங்கள் அறிமுகம். இவையாவும் 2007 ஒக்ரோபரினுள் முடிக்கப்படும்.

* தமிழகஅரசு முழுவதும் 285 ஒன்றியங்களில் வேளாண்மைத்துறை சார்ந்த தொழிற்சாலைகள் ஒரு கோடிரூபாவில் தொடங்கப் படவுள்ளது.

* 1967 இல் அறிஞர் அண்ணா ரூபாய்க்கு மூன்று படி அரிசி எனும் வாக்குறுதி வழங்கி அமோக வெற்றி பெற்றார். இதேபோல் ஏதாவது சலுகையினைத் தாமும் வழங்கினால் என்ன....என்று தமிழகஅரசு ஆலோசித்து வருகின்றது.

எனவேவெகுவிரைவில் தமிழகஅரசு ரூபாய்க்கோ......அல்லது சதத்திற்கோ.... அரிசி ....பருப்பு...வெங்காயம்....என சலுகை அறிவிப்பு செய்யக் கூடும். மக்கள் உலக அதிசயமோ- என திக்கு முக்காடினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதேபோல் மாணவர்களைக் கவரவும் புதிய புதிய சலுகைகள் உதயமாகியிருக்கின்றன.

* அரசு வசமுள்ள பாடசாலை வசதிகள் சீரமைப்பு
* இலவச பாடப்புத்தக திட்டம்
* நுழைவுதேர்வு இரத்து

* இவை மூலம் இறால் போட்டு சுறா பிடிக்கும் முயற்சியில்தான் தமிழகஅரசு இறங்கியுள்ளதெனலாம் மாணவர்களை கவருவதென்பது அவர்களது பெற்றோர்களை கவருவதாகவே கொள்ளவேண்டும். சுருங்கக் கூறின் வாக்கு வங்கி நிரப்ப நடவடிக்கைதான் எனலாம்.

அடுத்து அரச ஊழியர்களை கவருவதற்காகவே பலவிதமான சலுகைகள் உதவிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

* காவல்துறை குடும்பங்களுக்கு இதுவரை காலமும் சலுகை விலையில் பொருட்கள் வழங்கப்பட்டு வந்த்ன இனி அரச ஊழியர் களுக்கும் இச் சலுகைவழங்க ஏற்பாடு.

* அரச ஊழியர்களின் பஞ்சம் படியிலிருந்து 50 வீதம் அடிப்படை சம்பளத்தில் சேர்ப்பு.

* போக்குவரத்து ஊழியர்களுக்கு தீபாவளி ஊக்குவிப்பு வழங்கல்.

* ஓய்வு பெறும் வயது அரச ஊழியர் களுக்கு 58-60 ஆக நீடிப்பு

இதுவரை காலமும் அரச ஊழியர்கள் என்றாலே எட்டிக்காயாக கசந்தவர் தமிழக முதலமைச்சர். இப்பொழுதோ அரச ஊழியர் களுக்காக புதிய புதிய இனிப்பான சலுகைகளை அள்ளி வழங்கி அவர்கள் மீது தேனாக அன்பைப் பொழிகின்றார் என்று தமிழக மக்கள் மூக்கின் மீது விரலை வைக்காமைதான் எஞ்சியுள்ளது.

இவற்றைவிடவும் தலித் மக்களை கவருமுகமாக, ஆங்கிலேயர் காலத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்ட "பஞ்சமிநிலம்"எனும் நிலவகையினை மீட்கும் பணியில் தமிழகஅரசு இறங்கியுள்ளது என்றால் கேட்கவா வேண்டும். இதில் 75 வீதமானநிலம் அறக்கட்டளை வசமும் தனியார் வசமும் தமிழகஅரசு வசமுள்ளது. தமிழக அரசு தம்வசமுள்ள 770 ஏக்கரை உடனடியாக தலித் மக்களிடம் ஒப்படைத்துள்ளது. ஏனைய நிலத்தை மீட்டுத் தருவதாக வாக்குறுதி கூட அளிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை தலித் மக்கள் தமது நிலத்தை (அதாவது ஒரு இலட்சத்து 7025 ஏக்கர்) மீட்டு தருமாறு மத்தியரசிடமே கோரிக்கை விடுத்திருந்தனர். மத்தியரசு இதுவரை மௌனம் காத்தமையினால் தமிழகஅரசு 2006 சட்டமன்றத் தேர்தலை மனதில் கொண்டு முந்திக் கொண்டுள்ளது தலித்மக்களை கவர்ந்துள்ளது என்பதே உண்மையாகும்.

இவற்றைவிடவும் தண்ணீர் தட்டுப்பாடு உள்ள கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ஆழ்குழாய் கிணறு அமைக்கப்படவுள்ளது. மக்கள் போக்குவரத்திற்கு தமிழகம் முழுவதும் மேலதிகமாக பேருந்துகள் விடப்படவுள்ளன. மீனவர்கள் கடலிலிருந்து மீன்களை சந்தைக்கு கொண்டு செல்ல குளிர்சாதனவசதி கொண்ட அரசவாகனமே வழங்கப்படவுள்ளது. இவை சலுகைகளாக இருக்கும் அதேவேளை தமிழகஅரசு தான் நடைமுறைக்கு கொண்டுவந்த பல சட்டங்கள் திட்டங்களை திரும்பப்பெற்றும் கொண்டிருக்கின்றது.

அந்தவகையில்,
* நுழைவு தேர்வு இரத்து
* வாகன வரிகுறைப்பு
* மதமாற்ற தடைச்சட்டம் இரத்து

* இதுவரை அரச ஊழியர்களில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு நிறுத்திவைக் கப்பட்டிருந்த நிலுவைகள் மொத்தமாக வழங்கத் தீர்மானம்.

இதுவரை முன்வைத்த காலை பின் வைக்கும் பழக்கமில்லாத தமிழக முதலமைச்சர் ஒவ்வொரு அடியாக பின் வாங்குகின்றார் என்றால் விசயம் இல்லாமலா இருக்கும் என்பது தமிழக எதிர்க்கட்சிகளின் விமர்சனம். இதேபோல் தமிழக எதிர்க்கட்சி களும் சும்மா இருந்து விடவில்லை.

* 2427 கோடிரூபாவில் சேது சமுத்திரத் திட்டம்ஆரம்பித்தமை.

* காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை விரைந்து வழங்க மத்தியரசை நச்சரிக்கின்றமை.

* சுயமரியாதை திருமணமுறையினை சட்டமாக்கியுள்ளமை.

* புல்லட்புகையிரத சேவைக்கு மத்தியரசிடம் கோரியுள்ளமை.

போன்ற பல திட்டங்களைத் தமிழக எதிர்க் கட்சி தமது சாதனைகளாக பட்டிதொட்டி எங்கும் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன.'

இவ்வாறு தமிழகத் தேர்தலை ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் மிகவும் கோலாகலமாக எதிர்பார்த்து ஆரவாரித்துக் கொண்டிருக்கும் வேளையில் பல அதிரடியான சம்பவங்களும் தமிழகத்தில் அரங்கேறிக்கொண்டிருக்கின்றதை காணக்கூடியதாகவுள்ளது.


கருணாநிதி


ஜெயலலிதா

அந்த வகையில் தமிழகமுதலமைச்சர், சட்டமன்ற தேர்தலுக்கு தயாராகும் அதேவேளை தன்னிடமிருந்தே எதிர்க்கட்சிக்கு தாவ இருப்பவர்களையும் தனது எதிரி எனக் கருதப்படு பவர்களையும் களைவதில் மிகுந்த அக் கறைகாட்டி வருகின்றார் எனலாம்.

இந்த வகையில் தான் சென்னை மாநகராட்சி துணைமேயர் கராத்தே தியாகராஜன் பதவி யிலிருந்து தூக்கப்பட்டுள்ளமையை படம் பிடித்துக் காட்டுகின்றது.

ஏனெனில் அ.தி.மு.கவைச் சேர்ந்த கராத்தே தியாகராஜனை திடீரென ஆளும்கட்சியே பதவியிலிருந்து தூக்குவது என்பது நடக்கக் கூடியதொன்றா....... என்று மலைப்பாகத்தான் இருக்கின்றது... ஆனால் அதுதான் உண்மை அதுவேதான் நடந்து முடிந்தும் இருக்கின்றது.

கராத்தே தியாகராஜன் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளில் பிரதானமானவை மூன்றே மூன்றுதான்.

* 2005 சொத்து விபரம் வருமான துறையதிகாரிகளுக்கு காட்டியதில் ஊழல்.

* மாநகராட்சி உட்பட்ட பகுதியினுள் விளம்பரப்பலகை வைப்பதற்கு அனுமதி வழங்கியமை.

* மாநகரசபைக்கு சொந்தமான நிலத்தை விற்பனை செய்தமை.

இவற்றின் காரணமாகவேதான் முதல்வர் ஜெயலலிதா அவசர அவசரமாக சட்டம் ஒழுங்கை காப்பாற்றுபவராக செயற்பட்டதாக ஏனைய அ.தி.மு.க.வினர் கூறிக்கொண்டாலும் உண்மைகள் வேறாகவேதான் இருக்கின்றது.


கராத்தே தியாகராஜன்

அந்தவகையில் நோக்கின் ஆளும்கட்சியில் இருந்து கொண்டாலும் கராத்தே தியாகராஜன் எதிர்க்கட்சியான தி.மு.க கூட்டணிக்கு சார்பாகவும், இசைவாகவும் நடந்து கொண்டிருந்தமை அரசல் புரசலாக மேலிடம் (தமிழக முதலமைச்சர்) அறிந்து கொண்டிருந்த போதும், எதுவித பாரதூரமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆனால் அண்மைக்காலமாக கராத்தே தியாகராஜன் கட்சிச் தாவலில் ஈடுபடப்போவதாக கிசுகிசுக்கப்பட்டது. அதாவது எதிர்க்கட்சிவரிசைக்கு கராத்தே தாவுவது உறுதியாகிவிட்ட நிலையி லேயே இந்த அதிரடிகளை தமிழக முதலமைச்சர் மேற்கொண்டதாகப் பேசப்படுகின்றது.

அது மட்டுமன்றி கராத்தே தியாகராஜனின் கட்சித்தாவலை பொறுக்க முடியாத தமிழக முதலமைச்சர் அவரை சிறைக்குள் தள்ளி விடுவதில் குறியாக இருந்தமையினையடுத்தே பழைய குப்பைகள் எல்லாம் கிளறப்பட்டன. இதனாலேயே கராத்தே சென்னையை விட்டு தலை மறைவாகினார். தமிழக பொலிசார் கராத்தே தியாகராஜனை கண்கொத்திப் பாம்பாய் தேடியமையுமுண்டு இவ்வாறான சம்பவங்களுக்கிடையிலேயே தமிழக முதலமைச்சர் கராத்தே தியாகராஜனது சென்னை துணைமேயர் பதவி பறிக்கப்பட்டதாக கடந்த 15 ஆம் திகதி அறிவிப்பு செய்தார்.

தற்போது தலைமறைவாகியிருந்த கராத்தே சென்னை திரும்பியுள்ளார். தான்குற்றமற்றவரென்றும் தன்னை கட்சியிலிருந்து நீக்கியதும் பதவி பறித்ததும் மோசடி என்றும் புலம்புகின்றார். தான் அம்மா அம்மா என்று தமிழக முதலமைச்சருக்கு கொடுத்த மரியாதைக்கு தன்னை அவர் அவமதித்து விட்டதாக வேறு குறைபட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், எதிர்க்கட்சிவரிசைக்கு தாவுவது குறித்தும் அவர் சமிக்ஞை காட்டியுள்ளார். மூப்பனாரே தனது அரசியல்குரு என்று கூறி வருவதால் நிச்சயம் காங்கிரஸில் சேருவது உறுதி என்பதாய் அவர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

அதுமட்டுமன்றி எதிர்க்கட்சியின் ஆதரவுடன் துணைமேயராக கராத்தே தியாகராஜன் நிலைப்பதையே அதிகம் விரும்புகின்றபோதிலும் ஆனால் தமிழக முதலமைச்சர் சென்னை மாநகராட்சியை கலைப்பதில் குறியாக இருக்கின்றார். சட்டச்சிக்கல்கள் மாநகராட்சியினை கலைப்பதில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

என்றாலும், தமிழக முதலமைச்சர் சென்னை மாநகராட்சியை கலைப்பதில்தான் மும்முரமாக செயற்படுவதாகக் கூறப்படுகின்றது.

ஆக.... தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு முன்னரே தனது கட்சியிலுள்ளவர்களில் புல்லுருவிகளாயிருப்பவர்களைக் களைவதில் தமிழக முதலமைச்சர் முனைப்புடன் செயற்படுவதையே கராத்தே தியாகராஜனின் பதவிநிலைபறிப்பு எடுத்துக் காட்டுகின்றது.

எனவே தமிழகத்திலுள்ள ஆளும் கட்சியினரில் அடுத்து உருளப்போகும்தலை யாருடையது என்பதே இன்றைய வினாவாகும் என்றால் மிகையில்லை எனலாம்.

## கிணற்றில் தவறி வீழ்ந்த சிறுமி பரிதாபகரமாக மரணம்

மாங்குளம் பெரிய புளியங்குளம் கிராமத்தில் கடந்த சனிக்கிழமை கிணற்றில் தவறி வீழ்ந்த சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்தார். மு/பெரிய புளியங்குளம் அ.த.க பாடசாலையில் ஆண்டு 5 இல் கல்வி பயிலும் ஜெய வீரசிங்கம் சிந்துஜா (வயது 10) என்ற மாணவியே உயிரிழந்தவராவார். இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; சம்பவ தினம் மாலை 6.00 மணியளவில் வீட்டில் இருந்த பாதுகாப்பற்ற கிணற்றில் தண்ணீர் அள்ளும் போது தவறி வீழ்ந்துள்ளார்,உடனே இதைக் கண்டதாயார்அழுகுரல்இட்டு அயல வர்கள் வந்து சிறுமியைக் காப்பாற்ற முயன்ற போதிலும், சிறுமியை சடலமாகவே மீட்டனர். இச்சம்பவம் [illegible] மாங்குளம் காவல்துறையினர் கிரிப்பட்டமுறிப்பு கிராமசேவகர் சிதம்பர[illegible] யோர் விசாரணையை மேற்கொண்டனர் (14)

## கொல்லர் புளியங்குள கிராம தேவைகள் குறித்து ஆராய்வு

வவுனியா கொல்லர் புளியங்குளம் கிராமத்தினை அபிவிருத்தி செய்வது தொடர்பான ஆரம்பக் கூட்டம் அண்மையில் அந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கிராம அபிவிருத்தியினை நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொள்ளவுள்ளது. 4,500,000 ரூபா செலவில் இந்தக் கிராமம் அபிவிருத்தி செய்யப்பட இருப்பதாக வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவிக்கின்றது. இந்த ஆரம்ப நிகழ்வில் வவுனியா மாவட்ட நிகொட் திட்டப் பிரதித் திட்ட பணிப்பாளர் கிருபாசுதன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் துஷ்யந்தன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மாவட்ட பணிப்பாளர் திருஞானசம்பந்தமூர்த்தி, பொறியியலாளர் செல்வரஞ்சன், கிராமசேவையாளர், பிரதேச நிர்வாகசபை உறுப்பினர்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (21)

## பரிசில் வழங்கல்

சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்பட்டு வரும் எதிர்கால எழில்என்ற சேமிப்புத் திட்டத்தில் பரிசுக்குரியஅதிர்ஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டுப் பரிசு வழங்கும் வைபவம் வியாழக்கிழமை காலை9.00மணிக்குப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பணிமனையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், பிரதேசசெயலர்,முல்லை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எனப்பலர் கலந்துசிறப்பித்தனர்.(19)



# விளையாட்டு அரங்கு

## அவுஸ்திரேலியர்கள்– நாங்களே மேலானவர்கள்



உலகின் டெஸ்ட் கிரிக்கெட்டிலும் ஒரு நாள் போட்டிகளிலும் தரவரிசையில் முதலாமிடத்திலுள்ளதும் உலக சம்பியன் என வர்ணிக்கப்படுவதுமான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி மீண்டும் தனது வலிமையை நிலைநிறுத்தியுள்ளது.

அதாவது கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமான உலக பதினொருவர் அணியுடனான சுப்பர் சீரிஸ் ஒருநாள் தொடரை மூன்றுக்குப் பூச்சியம் என்ற நிலையில் கைப்பற்றிய கையுடன் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமான ஆறு நாட்களைக் கொண்ட ஒரு டெஸ்ட் தொடரையும் அதிக பட்சமாக மூன்றரை நாளில் முடிவுக்குக் கொண்டு வந்து அதனை 210 ஓட்டங்களால் அபாரவெற்றியையும் கண்டு விட்டது.

அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரை இந்தத்தொடரில் கலந்துகொண்டது கடும் மன அழுத்தத்துடன் என்றால் மிகையாகாது. காரணம்அது சுமார் 17 வருடங்களாகக் கட்டிக்காத்த ஆஷஸ் கிண்ணத்தை இங்கிலாந்திடம் பறிகொடுத்ததும் அதற்கு முன்பு நடைபெற்ற கவுண்டி அணியுடனான போட்டியில் ஐந்து விக்கெட்டுக்களால் தோல்விகண்டதும் மற்றும் பங்களாதேஷ் அணியுடனான ஒரு நாள் போட்டி ஒன்றில் ஐந்து விக்கெட்டுக்களினால் தோல்வியுற்றிருந்ததுமாகும்.

அது மட்டுமன்றி உலகிலுள்ள டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணிகளிலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட பிரபல பந்துவீச்சு, துடுப்பாட்ட வீர்க ள காண்ட அணியுடன் மோதுவ தென்பது போட்டி ஆரம்பமாகு முன்பு அவுஸ்திரேலிய வீரர்களுக்கு பாரிய சவாலாகவே இருந்திருக்கும்.

எவ்வாறாயினும் அந்தத் தோல்விகளுக்கெல்லாம் பரிகாரம் தேடும் நோக்கில் சற்றும்தளராமல் துணிவுடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய வீரர்கள் தமது இலட்சியத்தில் வெற்றி கண்டுவிட்டனர். எனினும் முன்னைய தோல்விகளால் அவுஸ்திரேலிய அணி மிகுந்த அவமானத்துக்குட்பட்டதை மறுப்பதற்கில்லை. ஆயினுமஇவ் வெற்றிகள் மூலம் அவுஸ்திரேலிய அணி தனது திறமையை ஐயம்திரிபற நிரூபித்தது.

ஒரு நாட்டு அணிக்கும்- தெரிவு அணிக்கும் இடையிலான போட்டிகள் எப்பொழுதும் சிறப்பானதாக அமையப்பெற்றதாக இருக்க மாட்டாது என்ற அப்பிராயம் பொதுவாகவே உண்டு. ஏனெனில் இத்தகைய போட்டியானது ஒரு கட்டமைப்புடன் கூடிய அணிக்கும் கட்டுக்கோப்பற்ற அணிக்கும் இடையிலான போட்டியாக எப்பொழுதும் பார்க்கப்படுவதுண்டு.

அத்தோடு கவஸ்கர் தலைமையிலான குழு மட்டுமல்ல யார் தெரிவு செய்தாலும் உலக அணியைத் திறம்படத் தெரிவு செய்ய முடியாது என்பதே பொதுவான அபிப்பிராயமாகும். சில வேளையில் உலக பதினொருவர் அணியின் தலைவரைக் குழு ஒன்று தெரிவு செய்து, அவ்வணித்தலைவர், உலக அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்திருப்பின் இதனைவிடச் சிறந்த போட்டிகளைக் கொடுத்திருக்க முடியும்.

இதேவேளை இம்முறை ஐ.சி.சி உலக அணியின் தலைவர்கள் கூடப் பொருத்தமானவர்களா என்பது கேள்விக்குரியதே. எடுத்துக்காட்டாக ஐ.சி.சி.யின் இவ்வாண்டிற்கான ஒரு நாள் போட்டிக்கான சிறந்த அணித்தலைவராக தெரிவு செய்யப்பட்ட சிறிலங்கா அணித்தலைவர் மார்வன் அத்தப்பத்துவிடம் உலக அணியின் தலைமைப் பதவியை வழங்கியிருக்க முடியும். ஆனால், அவருக்கு அணியில் இடம் கூட அளிக்கப்பட்டதாகவில்லை. இதேபோன்றே டெஸ்ட் போட்டிக்கும் அணித்தலைவர் பொருத்தமானவரா என்ற கேள்வி இல்லாமல் இல்லை.

அதாவது அவுஸ்திரேலிய அணியை தோற்கடித்த, அன்றி அவுஸ்திரேலிய அணிக்கு நெருக்கடி கொடுத்த நாடுகளின் அணிகளின் தலைவர்களில் ஒருவரை அணித் தலைவராக்கி இருக்கலாம்.

ஆனால் உலக பதினொரு பேர் அணியில் தெரிவுகள் தவறாக இருப்பினும் பொது அணி ஒன்றின் கூட்டமைப்பு சிக்கலானது எனினும், தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் அனைவரும் கிரிக்கெட்டில் சாதனையாளர்களும் நட்சத்திர வீரர்களுமே ஆகும். அவ்வாறு இருந்தும் ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் இவர்களின் தோல்வியானது பரிதாபத்திற்குரியதே.

ஒரு நாள் தொடரில் இரண்டு போட்டிகளில் விளையாடிய பாகிஸ்தான் பந்துவீச்சாளரான சொஹைப்அக்தர் ஒரு விக்கெட்டைக் கூட வீழ்த்தவில்லை என்பதோடு 17 ஓவர்களில் 110 ஓட்டங்களையும் அணிக்கு வழங்கியிருந்தார். இதனால். டெஸ்ட்போட்டியில் அவருக்குஇடம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

பிரபல வீரர் லாரா டெஸ்ட் தொடரில் வெறும் ஐந்து ஓட்டங்களே பெற்றார். . சேவாக் டெஸ்ட் போட்டியில் ஆகக் கூடுதலான ஓட்டங்களையும் மூன்று ஒரு நாள் போட்டிகளிலும் 64 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். ராவிட்டும், கலிசும் கூட உதவவில்லை.

டெஸ்ட் போட்டியில் இன்சமாம் உல்ஹக் இரு இனிங்சிலும் ஒரு ஓட்டத்தையே பெற்றார்.

எவ்வாறேனும் அவுஸ்திரேலிய அணியுடனான போட்டித் தொடர் இரண்டுக்கும் உலக அணி வீரர்களைத் தெரிவு செய்ததில் தவறு இருப்பதாகக் குற்றம்சாட்டப்படினும் இவர்களைத் தவிர எவ்வாறான வீரர்கள் பங்குபற்றியிருப்பினும் அவுஸ்திரேலியா தனது திறமையை நிரூபித்திருக்கும் என்பதை எவருமே நிராகரித்துவிட முடியாது. இதில் டெஸ்ட் போட்டியை வென்றதுக்கு முழு ஒத்துழைப் பையும் தந்தவர் அவுஸ்திரேலியாவின் மக்கில் என்றால் மிகையில்லை.

## சொந்த மண்ணில் பெரும் சவாலை எதிர்கொள்ளப் போகும் இந்தியா!






மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே ஆகிய நாடுகளின் கிரிக்கெட் வீரர்களுக்கும், கிரிக்கெட் சபை மற்றும் தேர்வாளர் குழுவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிணக்குகள் காரணமாக முன்னைய தரத்திலிருந்து அவ்வணிகள் வீழ்ச்சியுற்றிருப்பது போன்று எமது அயல் நாடான இந்திய அணியும் பாதாளத்தை நோக்கிச் செல்கின்றதோ என அச்சம் கொள்ள வேண்டிய நிலையில் அந்நாட்டு அணியும், கிரிக்கெட் சபையும், தேர்வாளர்களும் மீண்டும் ஒரு பலப் பரீட்சைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

அதாவதுஅண்மைக்காலமாக இந்திய கிரிக்கெட் அணி ஒரு நாள் தொடர்களில் தொடர்ந்து இறுதிப் போட்டியில் தோல்விகளைச் சந்தித்து கிண்ணத்தை எதிரணியிடம் பறிகொடுத்து வந்துள்ளது. அதன் காரணமாக பயிற்றுநர் மீதும் அணித்தலைவர் மீதும் பல்வேறு விமர்சனங்கள் தோன்றியுள்ளன.

இவ்வாறான நிலையில் வரும் 25 ஆம் திகதி முதல் நவம்பர் 16 ஆம் திகதி வரை இந்திய வீரர்கள் பாரிய பலப்பரீட்சையில் ஈடுபடவுள்ளனர். அதாவது கடந்த யூலை -ஓகஸ்ட் மாதங்களில் சிறிலங்காவுக்கு வருகை தந்து அவ்வணியுடனான மூன்று போட்டிகளில் தோல்வியடைந்தது மட்டுமன்றி இலங்கை மண்ணில் நடைபெற்ற சிறிலங்காவுடனான கணிசமான போட்டிகளில் இந்தியா தோல்வியையே சந்தித்துள்ளது.

ஆகவே தமது மண்ணில் நடைபெறும் மேற்படி பலப்பரீட்சையில் இந்திய அணி தொடரை வெல்ல வேண்டியது அதற்கு முக்கிய தேவையாகவுள்ளது. எனினும் இந்தத் தொடருக்கான அணியைப் பொறுத்தவரை அணித் தலைமை ராகுல் ராவிட்டிடம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் முன்பு தெரிவிக்கப்பட்ட போட்டித் தொடருக்கும் ராவிட்டே தலைமை வகித்துள்ளார். தோல்வியுடன் நாடு திரும்பினார். இந்தத் தொடரில் மட்டுமன்றி ட்ராவிட் தலைமை வகித்த போட்டிகள் கணிசமானவை தோல்வியையே சந்தித்துள்ளன. எனவே ட்ராவிட்டைப் பொறுத்தவரையில் இத்தொடர் ஒரு சவாலான தொடராகும்.

தெரிவு செய்யப்பட்டுள்ள இந்திய அணியைப்பொறுத்தளவில் வேகப்பந்து வீச்சாளர்களாக சஹிர்கான், நெஹ்ரா இருவரும் அணியில இடம்பெறவில்லை. அத்துடன் சிறந்த களத்தடுப்பாளரும் துடுப்பாட்டத்தில் நம்பிக்கை அளிக்கக் கூடியவருமான முகமட் கைப் அணியில் இடம்பெறவில்லை. இவை இந்திய அணிக்கு சற்றுப்பின்னடைவாக இருந்த போதும் துடுப்பாட்ட வீரர்களான சேவாக், தோணி, யுவராஜ்சிங் போன்ற அதிரடி வீரர்கள்அணியில் இடம் பெற்றிருப்பது அணிக்குச் சற்றுப் பலமான தொன்றே. எனினும் முன்னைய போட்டிகளில் இவர்களை இலகுவாகவீழ்த்திய சிறிலங்காவின் பந்து வீச்சாளர்களான சமிந்தவாஸ், தில்கார பெர்னாண்டோ நுவன் சொய்ஸா, உப்புள் சந்தன போன்ற வீரர்கள் அணியில் இடம் பிடித்துள்ளமை இந்திய அணிக்குப்பெரும் சவாலாகவே இருக்கும்.

இதேவேளை இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரின் மீள் வருகையும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகவும் உள்ளது. நீண்ட இடைவெளியின் பின்னர் அணிக்குத் திரும்பியுள்ள சச்சின் டெண்டுல்கர் தனது முன்னைய திறமையை வெளிப்படுத்துவார் என்ற எதிர்பார்க்கை பரவலாக இல்லாது விடினும், சோடை போகாத ஆட்டம் ஒன்றை வெளிப்படுத்துவாரா என்ற கேள்வியும் உள்ளது.

எனினும் புதிதாக அணியில் இடம் பெற்றுள்ள கேரள வீரர் சிறிசாந்த் அண்மைக்காலமாக முதல்தரப் போட்டிகளில் சிறப்பான பந்து வீச்சை மேற்கொண்ட காரணத்தினால் அணியில் இடம் பிடித்துள்ளார். ஆயினும் சங்கக்கார, ஜெய சூரிய, மகேல ஜயவாத்தனா போன்றவர்களின் துடுப்பாட்டத்தைக் கட்டுப்படுத்துவாரா என்பது போட்டி நடைபெறும் போது அறியவரும்.

சிறிலங்கா அணியைப் பொறுத்தவரை அண்மையில் சிறந்த ஒரு நாள் போட்டி அணித் தலைவராக தெரிவு செய்யப்பட்ட அத்தப்பத்துவின் தலைமையில் இந்திய அணியை அதன் மண்ணில் வீழ்த்துவது என்ற சபதத்துடன் அங்கு செல்லவிருக்கின்றது. அவ்வணியின் குமார் சங்கக்கார சர்வதேச மட்டத்தில் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்ற பெருமைக்கு உரியவராகியுள்ளார். உதாரணமாக அண்மையில் அவுஸ்திரேலிய அணிக்கெதிராக உலக 11 பேர் அணியில் துடுப்பாட்டத்தில் சிறந்து விளங்கினார். அத்துடன் அண்மையில் நடைபெற்ற இரு பிரதான கல்லூரிகளின் பழைய மாணவர்பங்குகொண்ட ஒரு நாள் போட்டியில் சதமடித்த மகேல ஜயவர்த்தனவின் துடுப்பாட்டம் இந்திய வீரர்களுக்கு ஏற்கனவே தெரிந்தவிடயமாகும். இலங்கையில் நடைபெற்ற இந்தியாவுடனான போட்டியின் போது அவர் தொடர் நாயகன் என்ற விருதைப்பெற்றார். இவரின் துடுப் பாட்டத்தை இர்பான் பதான், சிறிசாந்த், யதாவ், ரெய்னா ஆகியோரின் பந்த வீச்சு எவ்வாறு கட்டுப்படுத்தும் என்பதுமே போட்டியின் போக்கைத் தீர்மானிப்பவையாக இருக்கும்.

எவ்வாறேனும் இந்திய அணி சிறிலங்காவில் இழந்த பெருமையை சொந்த நாட்டில் பெற்றுக் கொள்ளுமா அல்லது நாம் எந்த மண்ணிலும் சளைத்தவர்கள் அல்ல என நிரூபித்து சிறிலங்கா வெற்றியுடன் நாடு திரும்புமா என்பது வரும் வாரங்களில் தெரிந்துவிடும்.

வடிவேல்

# மகிந்தவுக்கு பிரதமர் பதவி வழங்குவதற்கே ஜே.வி.பி யினர் முன்னர் விரும்பவில்லை

## சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்

பிரதமரைத் தெரிவு செய்யும் போது ஜே.வி.பியினர் எனக்கே முதலில் ஆதரவு தெரிவித்தனர். இரண்டாவதாக கதிர்காமரை விரும்பினர். உண்மையில் மகிந்தவிற்கு அப் பதவி வழங்கப்படுவதனை ஜே.வி.பியினர் விரும்பவில்லை. இப்போது அவர்கள் மகிந்தவின் தோளில் ஏறிக் கொண்டுள்ளனர், என சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

சனாதிபதிப் பதவிக் காலத்தை குறைப்பதற்காக செயற்பட்டவர்கள் யார் என்பதை தேர்தலின் பின் வெளிப்படுத்துவேன் என ஞாயிறு சிங்கள இதழொன்றிற்கு அளித்த நேர்காணலில் அநுரா மேலும் தெரிவித்திருப்பதாவது;

நான் சுதந்திரக் கட்சியிலிருந்து ஐ.தே.கட்சிக்கு செல்லவில்லை தள்ளப்பட்டேன். நான் மட்டுமல்ல எனது அக்கா சந்திரிகாவும் சுதந்திரக் கட்சிக்கு வெளியே இருக்கவில்லையா? 1970-1977 காலத்தில் டட்லிக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.ஆர் எனது தாயாரின் அரசாங்கத்தில் இணைய முயன்றார். இது தெற்காசிய அரசியலில் சாதாரணம். பிரதமர் பதவியை, சனாதிபதி வேட்பாளர் பதவியை நான் விருப்புடன் விட்டுக் கொடுத்தேன். நான் குறுக்கே இருந்திருந்தால் கட்சிக்குள் பிரச்சினை ஏற்பட்டிருக்கும். நான் கட்சியைப் பற்றி யோசித்து அனைத்தையும் மகிந்தவிற்கு விட்டுக் கொடுத்தேன். இப்போது மகிந்த தனது திறமையை வெளிப்படுத்தி மக்கள் அபிமானத்தை வெல்ல வேண்டும்.

நான் எந்தத் தேர்தலிலும் தோற்றவனல்ல. 1977 இல் இருந்து தொடர்ச்சியாக வென்றிருக்கின்றேன். அத்தகைய வரலாற்றைக் கொண்ட வேறு யாராவது இவ் அரசாங்கத்தில் இருக்கிறார்களா? ஐ.தே.கட்சியில் என்றால் ரணில் உட்பட பலர் 1977 இல் இருந்து தொடர்ச்சியாக இருக்கிறார்கள்.

பிரதமரைத் தெரிவு செய்யும் போது ஜே.வி.பியினர் எனக்கே முதலில் ஆதரவு தெரிவித்தனர். இரண்டாவதாக கதிர்காமரை விரும்பினர். உண்மையில் மகிந்தவிற்கு அப் பதவி வழங்கப்படுவதனை ஜே.வி.பியினர் விரும்பவில்லை. இப்போது அவர்கள் மகிந்தவின் தோளில் ஏறிக் கொண்டுள்ளனர். நாம் மகிந்தவை சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளராக நியமித்தோம். அதன் பின் அவர் ஜே.வி.பி, ஹெல உறுமயவுடன் ஒப்பந்தம் செய்தார். மகிந்த-ஜே.வி.பி ஒப்பந்தத்திற்கு நான் சென்ற கதையைக் கூறுகின்றேன். அன்று காலை 9.00 மணிக்கு என்னை அழைத்த மகிந்த 10.00 மணிக்கு அலரி மாளிகைக்கு வருமாறு கூறினார். தினேஷ் குணவர்த்தனவும் நானும் சென்றோம். அங்கு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது என்று எனக்குத் தெரியாது. சோமவன்ச, வீரவன்ச ஆகியோர் அங்கிருப்பதைக் கண்டேன். மேளம் அடித்து தீபம் ஏற்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர், பிரதமர் பதவிக்கான வேட்பாளர் என்ற போதிலும் எனக்குத் தெரியாமலேயே காரியங்கள் நடைபெற்றன. ஜே.வி.பியினர் மட்டும்தான் நாட்டை நேசிக்கின்றார்களா? சுதந்திரக் கட்சியும் நாட்டை நேசிப்பதால்தான் 29 ஆண்டுகள் நாட்டை மக்கள் ஒப்படைத்தனர். ஜே.வி.பி, ஹெல உறுமயவிடம் எத்தனை தடவை நாட்டைக் கொடுத்தனர்? கொடுக்கவில்லைத்தானே?

சனாதிபதி வேட்பாளர் தனது வெற்றிக்காக எதையும் செய்யலாம். ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை தாரை வார்த்துவிட உரிமையில்லை. தெளிவாக ஒன்றைக் கூறவேண்டும். இவர்கள் எம்முடன் சேர்ந்து அரசாங்கத்திற்கு வந்தாலும் சுதந்திரக் கட்சிதான் முதன்மைக் கட்சி. நாட்டை நிர்வகிப்பது தேர்தல் மேடைகளில் சத்தமிட்டுப் பேசுவது போன்று இலகுவான விடயமல்ல. இரண்டுக்கும் பாரிய வித்தியாசமுள்ளது.

நாட்டின் எல்லையைக் காப்பாற்ற முடியாவிட்டால் இராணுவத்தை கலைத்துவிட வேண்டும் என ஜே.வி.பியின் ஒருவர் கூறினார்.இதை நான் கடுமையாக ஆட்சேபிக்கின்றேன். மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்திற்கெதிராக 1971, 89ம் ஆண்டுகளில் இடம் பெற்ற கலகங்களை அடக்கி சனநாயகத்தை வெல்ல வைத்தது, 20 ஆண்டு காலம் யுத்தம் நடத்தி நாட்டைப் பாதுகாப்பது வீரமுள்ள எமது இராணுவத்தினரே. மேற்படி இழிவான பேச்சை பேசிய மனிதரிடம் அப்படிப் பேசுவது மூளையாலா அல்லது வேறு எதனாலுமா என்று கேட்கின்றேன். இராணுவம் இல்லாத நாடு உலகில் எங்கும் உள்ளதா? கியூபாவிலும் இராணுவம் உள்ளது.

முதன்மைக் கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து ஒரே குரலில் பேசி வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சுதந்திரக் கட்சி அதிகார பரவலாக்கத்தை மேற் கொள்ளும். சமஷ்டி குறித்து எனது தந்தை 1935ஆம் ஆண்டிலேயே பேசினார். பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இன்னும் எவ்வளவு காலத்திற்கு நாட்டை நாசமாக்குவது என அவர் தெரிவித்துள்ளார்.

# நீரில் மூழ்கி மாணவன் பலி

(திருமலை)

மகியங்கனை நீர்வீழ்ச்சியில் குளிக்கச் சென்ற மாணவர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார். திருமலை சென்ஜோசப் கல்லூரி மாணவரான சிவநேசச் செல்வன் சுஜீவன் என்ற மாணவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். கடந்த 13ம் திகதி கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு 30 மாணவர்கள் தென்னிலங்கைக்குச் சென்றிருந்தனர். வழியில் நான்கு மாணவர்கள் மகியங்கனை நீர் வீழ்ச்சியில் குளித்துக்கொண்டிருந்த போது நீரில் மூழ்கியுள்ளனர். இவர்களில் மூவர் ஊர் மக்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர். ஆனால் சிவநேசச்செல்வன் சுஜீவன் என்ற மாணவரைக் காப்பாற்ற முயன்ற போதும் முடியாத நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

# வடக்கு- கிழக்குப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்

## முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதில் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு உறுதியாக உள்ளதென கூட்டமைப்பின் தலைவர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

யுத்தம் ஒன்று ஏற்படுமாயின் வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களுமே அதிகமாகப் பாதிக்கப்படுவர். இதனால் சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய சனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு வழங்க தமது கூட்டமைப்பு முன்வந்ததாக அவர்குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் மாங்குளம், பட்டாணிச்சூர், இக்கிரிகொல்லாவ ஆகிய மூன்று இடங்களில் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக சனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தியபோதே இதனை தெரிவித்துள்ளார். (32)


ACTION CONTRE LA FAIM

**ADVANCED FIELD OFFICER**
**For FOOD SECURITY DEVELOPMENT PROGRAMMES (JAFFNA)**

Action Contre La Faim is an International NGO involved in humanitarian activities in Srilanka, since 1997. Current activities are based in Ampara, Batticaloa, jaffna and Trincomalee districts.For a coming development programme of 2 years, **We require in jaffna services of a woman as advanced field officer (AFO).**

This position is suitable for an economist or an agriculturalist, who has **strong experience** of minimum 2 years in running livelihood programs and who is more than 27 years old.

the woman will be in charge of development programmes, mainly in the Islands, with a targeted **gender approach** (initiatives with women s group, widows...)She will manage the collection and analysis of livelihood data, the reporting and occasionally the representation at technical meet ings in jaffna. She will join a team of 2 AFOs, (junior and senior) and will work under the responsibility of the Food Security Programme Manager in jaffna.

Applicants must be charismatic, good in team management, fluent in English and able to do conversation in Tamil. Computer literacy, especially MS Word and Excel is required.

Category:Senior position
Duration: 1 year with insurance coverage.

Apply with in as soon as possible:
**ACF Food Security job Vacancy**
**No.40 Racca Lane,**
**Chundikuli,**
**Jaffna.** Tel: 021-222-2465/021 222- 6993.
(சி.13075)


# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 03 - 1975



மறைவு 18 - 10 - 2000

**மேஜர் ஆதவன்**

(முத்துச்சாமி-சிவகணேசன்)
ஆலய வீதி-காங்கேசன்துறை

சம்பவம்:-பிரமனாளன் குளம் மினிமுகாம் தகர்ப்பின்போது

சுயமாகி சுதந்திரத் தியாகி
இயல்பாகி எரிமலைக் குழம்பாகி
அயலவன் ஆதிக்க வெறியோட்டி
அன்னைமண் மீட்க நீ உருவாகி
புயலாகி புரட்சியின் வேராகி
புகழ்பூத் தாயாதவா படமாகி
வயதுக்குள்வாழாது சாவுக்குள் நின்று
வளர்கின்ற வாழ்வு நின் வாழ்வு அன்றோ

ஆதவன் இல்லம்,
02 ஆம் வட்டாரம்,
முத்துமாரி அம்மன் கோவிலடி,
புதுக்குடியிருப்பு.

(6853)

அன்புத்தந்தை
சகோதரிகள்.

# சிறு சம்பவம் இடம்பெற்றாலும் நவ 19 இல் மீள வாக்களிப்பு

(கொழும்பு)

நாட்டின் எப்பகுதியிலேனும் தேர்தல் சட்ட விதிகளை மீறி சிறுசம்பவம் இடம் பெற்றாலும் அங்கு நவம்பர் 19ஆம் திகதியில் மீள வாக்களிப்பு இடம்பெறும் எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார். மீள வாக்களிப்பிற்கான வாக்குச் சீட்டுகள் கூட அரச அச்சகத்தில் அச்சிடப்பட்டு விட்டதெனவும் கூறினார். எனவே தேர்தலில் ஆள் மாறாட்டம் செய்வதை யாரும் விரும்ப வேண் டாம். தேர்தல் விதிமுறைகளுக்கு ஏற்ப நடந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

நவம்பர் 17ஆம் திகதி நடைபெறவிருக்கும் சனாதிபதித் தேர்தல் தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளைச் சீராக்குவதற்கான முன்னோடிக் கூட்டம் இராஜகிரியவிலுள்ள தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற போது மேற்கண்டவாறு கூறினார். வடகிழக்கில் சனாதிபதித் தேர்தலை எவ்வாறு நடாத்துவது என்பது தொடர்பாகவும் அங்கு கலந்துரையாடப்பட்டது. தேர்தல் காலத்தில் ஊடகத்துறையினர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பான வழிகாட்டி நூல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.


அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
SALE ஸ்தாபனத்தாரின் SALE
தீபாவளி மலிவு விற்பனை
15.10.2005 தொடக்கம் 31.10.2005 வரை

| | | |
|---|---|---|
| சைனா சீத்தை | M | 60/= |
| சைனா பப்பிளின் | M | 55/= |
| சலஞ்சர் | M | 60/= |
| பட்டசில்க் | M | 80/= |
| சில்க் பொலிஸ்டர் | M | 60/= |
| ஸ்கேட் & பிளவுஸ் | | 400/=தொடக்கம் |
| சாறிவகைகள் | | 375/= தொடக்கம் |
| சூட்டிங் லெந் | | 200/=தொடக்கம் |
| சேட்வகைகள் | | 350/=தொடக்கம் |

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்,
54, பெரியகடை வீதி, T.P.222 2899
யாழ்ப்பாணம்.
(சி.13070)

# பூகம்பத்தில் மூவாயிரம் காஷ்மீர் தீவிரவாதிகள் பலி;

## இந்திய செய்தி ஊடகம் பரபரப்புத்தகவல்

**கடந்த எட்டாம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தில் பாகிஸ்தான் கட்டுப்பாட்டு காஷ்மீரில் 3000 பாகிஸ்தான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் அரசு மறைத்துவிட்ட இந்தச் செய்தி இப்போது வெளியாகியுள்ளது என இந்தியச் செய்தி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:**

பாகிஸ்தான் பகுதி காஷ்மீரில் முகாம்கள் அமைத்து இந்தியாவுக்குள் ஊடுருவத் தயாராக இருந்த பாகிஸ்தான் தீவிரவாதிகள் மூவாயிரம் பேரும் பூகம்பத்துக்குப் பலியாகி இருக்கிறார்கள். அதை அதிபர் முஷாரப்பின் அரசு மறைத்துவிட்டது.

ஜம்முகாஷ்மீர் விடுதலை முன்னணியின் அரசியல் குழுத் தலைவர் ஷாபிர் சவுத்திரி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது பற்றி அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

பாகிஸ்தான் கட்டுப்பாட்டுக் காஷ்மீரில் பூகம்பம் தாக்கிய பல்வேறு பகுதிகளில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள் அல்லது படுகாயம் அடைந்தனர்.

பூகம்பம் ஏற்பட்ட ஒக்ரோபர் எட்டாம் திகதி வரை எல்லைப் பகுதியில் அவர்கள் முழு அளவில் செயற்பட்டு வந்தார்கள். எல்லைப் பகுதியில் இருந்த முஜாகிதீன் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள் அனைத்தும் கலைக்கப்பட்டு விட்டன என்று பாகிஸ்தான் அரசு கூறுகிறது. அவை கலைக்கப்படவில்லை முழு அளவில் இயங்கி வந்தன. அவற்றில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் இருந்தார்கள் என்ற ரகசியம் இப்போது அம்பலமாகி விட்டது.

இந்த முகாம்கள் பாகிஸ்தான் கட்டுப்பாட்டுக் காஷ்மீரிலும் பாலக்கோட், மன்சேரா போன்ற இடங்களிலும் இயங்கி வந்தன. இந்தப் பகுதியில் பேரழிவு ஏற்பட்டபோது மூவாயிரம் தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என அந்த அரசியல் குழுத்தலைவர் தெரிவித்திருப்பதாக அச் செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது.



*பீகார் சட்டமன்ற தேர்தலில் முதல்கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் நேற்று முன்தினம் முடிவடைந்தது. கடைசி நேர பிரச்சாரத்துக்குச் செல்லும் முன் பாட்னாவிமான நிலையத்தில் பா.ஜ.தலைவர் அத்வானியும், ஐக்கிய ஜனதா தளதலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டசும் சந்தித்துக்கொண்டனர்.*

## மனித நேயத்தின் அடிப்படையிலேயே பாக் உலங்கு வானூர்திகள் பறக்க அனுமதித்தோம்

**-சிவராஜ் பட்டேல்**

எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டு பகுதியில் பறக்க தடைவிதிக்கப்பட்ட வான்வெளியில் பாகிஸ்தான் உலங்குவானூர்திகள் பறக்க மனித நேயத்தின் அடிப்படையிலேயே அனுமதிக்கப்பட்டது என்று மத்திய உள்துறை அமைச்சர் பட்டேல் கூறினார்.

நிருபர்களிடம் கருத்து தெரிவிக்கையில் இந்திய எல்லை கட்டுப்பாட்டு' கோட்டுப் பகுதியில் வான்வெளியில் பிறநாட்டு விமானங்கள் பறக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது. பூகம்பத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானுக்கு மனித நேயத்தின் அடிப்படையில் இந்தப் பகுதியில் உலங்குவானூர்திகள் பறந்துசெல்ல அனுமதி வழங்கப்பட்டது.பாகிஸ்தான் மட்டுமன்றி எந்த நாடாக இருந்தாலும் இந்த உதவியை இந்தியா செய்யும் இதுபோன்ற இக்கட்டான நேரங்களில் எல்லாநாடுகளும் ஒருவருக்கொருவர் உதவிசெய்யவேண்டும்.பாக். உலங்கு வானூர்திகள் பறக்க அனு மதித்ததால் நாட்டின் பாதுகாப்புக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாது என்றும் சிவ்ராஜ் பட்டேல் கூறினார்.

# ஆந்திராவில் கனமழை இருபத்தைந்து பேர் பலி

ஆந்திராவில் கடந்த நான்கு நாட்களாக பெய்து வரும் கனமழைக்கு 25பேர் பலியாகியுள்ளனர்.பத்து மாவட்டங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

வங்கக் கடலில் குறைந்த காற்ற ழுத்த தாழ்வு மண்டலம் உருவாகி உள்ளது. இதனால் ஆந்திராவின் பல பகுதிகளில் குறிப்பாக கடலோரப் பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.கடந்த நான்கு நாட்களாக இடைவிடாமல் தொடர்ந்து மழை பெய்கிறது.மழைக்கு இதுவரை 25 பேர் பலியானதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

பதினைந்து மாவட்டங்களில் 630க்கும் அதிகமான கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின கனமழையில் கடலோர மாவட்டங்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.பத்து மாவட்டங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

பல மாவட்டங்களில் வெள்ளத்தில் மூழ்கிய கிராமங்களில் இருந்து 2115 குடும்பங்கள் பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாராண உதவிகள் வழங்க 55முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.681.67 ஏக்கர் நிலத்தில் பயிர்கள் சேதமடைந்தன.

விசாகப்பட்டினம் விமான நிலையத்துக்குள் வெள்ளம் புகுந்து ஓடு தளத்தை மூழ்கடித்ததால் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.



*தமிழகம் ஏற்காடு பகுதியில் நேற்று முன்தினம் கள்ளமாக வெட்டிக்கொண்டு செல்லப்பட்ட சந்தன மரக்கட்டைகளை வாகனத்துடன் கைப்பற்றிச் செல்லும் பொலிசார் .*

## பீகாரில் இம் முறையும் தொங்கு சட்டசபை பத்திரிகைகள் கருத்துக் கணிப்பு

பீகாரில் இன்று முதல்கட்ட தேர்தல் நடக்கிறது அங்கு மீண்டும் தொங்கு சட்டசபை அமையும் என்று பத்திரிகைகள் கணித்துள்ளன.

பீகார் சட்டசபைக்கு கடந்த முறை நடந்த தேர்தலில் எந்தக் கூட்டணிக்கும் அதிக பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதைத் தொடர்ந்து சனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்பட்டுபின் சட்டசபையும் கலைக்கப்பட்டது.

பீகாரில் மொத்தமுள்ள 243 சட்டசபை தொகுதிகளுக்கும் நான்கு கட்டமாக தேர்தல் நடக்கிறது. அதில் முதல் கட்ட வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.

இம் முறையும் எந்த கட்சியும், அறுதிப் பெரும்பான்மை பெறவாய்ப்பில்லை எனவும், பெரும்பாலும், தொங்குசட்டசபையே அமையவாய்ப்புள்ளதாகவும்பத்திரிகைகள் நடாத்திய கருத்துக்கணிப்பில் தெரியவருகிறது.

## பீகார் தேர்தல் களத்தில் கிரிமினல்களின் மனைவிகள்!

பீகார்தேர்தலில் கிரிமினல்கள் போட்டியிட உயர் நீதிமன்றம் தடை விதித்ததையடுத்து பீகார் சட்டசபைத் தேர்தலில் கிரிமினல்களின் மனைவிகள் போட்டியிடுகின்றனர்.

தேர்தலில் கிரிமினல் குற்றவாளிகள் போட்டியிடுவதைத் தடுக்க உயர் நீதிமன்று சமீபத்தில் உத்தரவு ஒன்றை பிறப்பித்தது. கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு சிறைத் தண்டனை அனுபவிப்பவர்கள். தலைமறைவு குற்றவாளிகள், அறிவிக்கப்பட்ட குற்றவாளிகள் ஆகியோர் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும் படி தேர்தல் ஆணையகத்துக்கு உயர் நீதிமன்று உத்தரவிட்டது. இதனையடுத்து இவர் களது பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கும்படி மாநில அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது இதைச் சமாளிக்கும் வகையில் சம்பந்தப்பட்ட கிரிமினல்களின் மனைவிகளை தேர்தல் களத்தில்பலகட்சிகள் இறக்கி விட்டுள்ளன.


மாபெரும் கலைநிகழ்வு

வெண்பிரம்பு தினத்தை முன்னிட்டு இனிய வாழ்வு இல்ல மாணவர்களினால் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் 19.10.2005 அன்று புதன்கிழமை மாலை3.30மணிக்கு மாபெரும் கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

நடனம்,
வில்லிசை,
சங்கீதக்கச்சேரி,
கவியரங்கம்,
நாடகம்.



தமிழீழத்தின் முன்னணிப்பாடகர்கள் திரு. A.R சுகுமார்,திரு. S.வசீகரன் இவர்களுடன் இனிய வாழ்வு இல்ல மாணவர்கள், இசை ஆசிரியர்கள் பங்கேற்கும் இன்னிசை கானங்கள் என்பன சிறப்பாக இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வைக் கண்டுகளிக்க மாணவர்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகத்தினர்,
மாணவர்கள்,
இனிய வாழ்வு இல்லம்,
வள்ளிபுனம்.

(சி.13041)



யாழ்.பல்கலைக்கழகத்தில் 06.10.2005 ,07.10.2005 அன்று பட்டம்பெற்ற மாணவர்களே!

அன்றைய தினம் அரங்கில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட VEDIO மற்றும் புகைப்படப் பிரதிகளைப் பெறவிரும்புபவர்கள் விபரங்களை உடன் பதிவு செய்யவும்

காலம் :-19.10.2005-25.10.2005
நேரம் :-காலை 9.00-12.00,பிற்பகல் 1.00-4.00

குறிப்பு:- குறிக்கப்பட்ட திகதிக்குள் பதிவுகளை மேற்கொண்டு புகைப்படப்பிரதிகளைப் பெற்றுக்கொள்ளத் தவறும்பட்சத்தில் பின்னர் இதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

தொலைபேசித் தொடர்புகளுக்கு:-பொன்கவின் VEDIOலக்ஷ்மி தாதன், புகைப்படக் கலையகம்,
S.உதன்:-0777 288837,0776544158.

நேரில்:-
இல.90 சட்டநாதர்வீதி,
(இளம்கலைஞர்மன்றவீதி)
நல்லூர்வடக்கு,யாழ்ப்பாணம்.

(சி.13081)

# விசுவமடு வ.ச.கிரிக்கெட்போட்டி
# காலிறுதி அணிகள் தெரிவாகின!

(விசுவமடு)

விசுவமடு வர்த்தக சங்கம் நடாத்தும் மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியில் லீக் முறையிலான போட்டிகள் நேற்றுடன் முடிவிற்கு வந்தன.

இதன் பிரகாரம், தோழர்கள் நீலம், மாலதி, இளந்தாரகை ஏ, வித்தியா ஏ, புதியதாரகை, கிருஸ்ணபாரதி, இளந்தாரகை பி, கனகபுரம் ஆகிய அணிகள் தெரிவாகியுள்ளன. இக் காலிறுதிப் போட்டிகள் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

இதற்கு முன்னதாக நேற்று இறுதியாக மூன்று லீக் போட்டிகள் நடைபெற்றன.

இதில் கிருஸ்ணபாரதியை எதிர்த்து ஆடிய தோழர்கள் சிவப்பு அணி 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. கிருஸ்ணபாரதி 62/8, தோழர்கள் சிவப்பு 42/8.

மற்றொரு போட்டியில் இளந்தாரகைக்கு 'ஏ' அணி வித்தியா 'பி' அணியை ஏழு விக்கெட்டுக்களால் தோற்கடித்தது. வித்தியா 'பி' 39/7, இளந்தாரகை 'ஏ' 40/3.

அடுத்த லீக் போட்டியில் கிருஸ்ண பாரதி அணி எதிர்த்தாடிய செந்தாமரை அணியை ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டது. செந்தாமரை 30 ஓட்டங்கள், கிருஸ்ண பாரதி 31/4.

இப் போட்டிகளுக்கு நடுவர்களாக குமார், சுபானந் ஆகியோர் கடமையாற்றினர்.

# இந்.வுடனான ஒருநாள் தொடர் சிறிலங்கா அணி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணி வருகிற 20 ஆம் திகதி முதல் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடுகிறது. அந்த அணி இந்தியாவுக்கு எதிராக ஏழு ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது.இரு அணிகள் இடையேயான முதல் ஒருநாள் போட்டி வருகிற 25ஆம் திகதி நாக்பூரில் நடக்கிறது.

இந்தத் தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது அத்தப்பத்து தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் நீண்ட நாட்களாக அணியில் இடம்பெறாத வேகப்பந்து வீச்சாளர் சோயாசா மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தியத் தொடருக்கான இலங்கை அணி விவரம் வருமாறு அத்தப்பத்து (தலைவர்) ஜெயவர்த்தன, ஜெயசூர்யா, சங்கக்ரா,அனால்டு, தில்சான், தரங்கா, சமரவீரா, சந்தனா, முரளிதரன், மக்ரூப், தில்கரா பெர்னாண்டோ, லோகுகிட்டிச், சோயாசா, வாஸ். ஒரு நாள் போட்டி தொடர் அடுத்த மாதம் (நவம்பர்) 12 ஆம் திகதி முடிவடைகிறது. இத்தொடர் முடிவடைந்தவுடன் மறுநாள் இலங்கைஅணி அந்நாடு திரும்புகிறது. அதன் பிறகு அந்த அணி மூன்று டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் விளையாடுவதற்காக 25 ஆம் திகதி மீண்டும் இந்தியா செல்கிறது. டெஸ்டில் விளையாடும் அந்த அணி முன்னதாக மூன்று நாள் கொண்ட பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகிறது.





# உலக பதினொரு பேர் அணி அவுஸ்திரேலியாவிடம் பரிதாப தோல்வி





(சிட்னி)

சிட்னியில் நடைபெற்ற அவுஸ்திரேலிய உலக பதினொரு பேர் அணிகளுக்கிடையிலான சூப்பர் சீரிஸ் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 210 ஓட்டங்களால் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்சில் மத்தியு கெய்டனின் 111 ஓட்டங்களுடனும் கில்கிறிஸ்டின் 94 ஓட்டங்களுடனும் 345 ஓட்டங்களைப்பெற்று வலுவான அடித்தளத்தையிட்டது.

அடுத்து பதிலுக்கு ஆடிய உலக அணி தனது முதல் இன்னிங்சில் 190 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

எனவே 155 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த அவுஸ்திரேலிய உலக பதினொரு பேர் அணியின் பந்துவீச்சுக் காரணமாக 199 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது.

எனினும் 355 ஓட்டம் என்ற வெற்றிநோக்கி நேற்று முன்தினம் மாலை ஆட்டத்தைத் தொடர்ந்த உலக 11 பேர் அணி அன்றைய ஆட்டநேர முடிவில்இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 25 ஓட்டங்களைப் பெற்று பரிதாப நிலையிலிருந்தது. தொடர்ந்து நேற்றுக்காலை ஆட்டத்தைத் தொடர்ந்த ராவிட் லாரா இணை நிதானமாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தபோதும் ஷேன் வோனின் சுழல்பந்து வீச்சில் இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டது. ராவிட் 23 ஓட்டங்களையும் லாரா 36 ஓட்டங்களையும் பெற்றனர். எனினும் பின்னர் வந்த வீரர்களை மக்கில் விட்டு வைக்கவில்லை. அவரின் பந்துவீச்சில் விட்டோரி, ஹார்மிசன், முரளிதரன் ஆகியோர் ஓட்டம் பெறாமல் ஆட்டமிழந்து சென்றனர். பிளின்டொப் சற்று நேரம் நின்று பிடித்து 15 ஓட்டங்களைப் பெற்றார். அவரையும் மக்கில் வீழ்த்தினார். புச்சர் 17 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது வோனின் பந்தில் ஆட்டமிழந்தார்.

ஜக்கல்லிஸ் 36 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது இருந்தார். இன்சமாமுல்ஹக் பிரட்லீயின் பந்தில் எல்.பி முறையில் பூச்சியத்தில் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியாவின் மக்கில் 43 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களையும் வோன் 48 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

# டெல்கி அரை மரதன் போட்டியில் கென்யா வீரர்கள் முன்னிலை

### பெண்களில் ரஷ்ய வீராங்கனை முதலிடம்

(டெல்கி)

டெல்கியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரைமரதன் ஓட்டப் போட்டியில் ஆண்களுக்கான போட்டியில் கென்யா வீரரும், பெண்களுக்கான போட்டியில் ரஷ்ய பெண்மணியும் முதலிடம் பெற்றனர்.

ஆண்கள் பிரிவில் கென்ய நாட்டு வீரர் பிலிப்ரூகுத் ஒரு மணி ஒரு நிமிடம் 55 வினாடிகளில் 21 கி.மீ பந்தய தூரத்தைக் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். அவரைவிட 35 வினாடி பின்தங்கிய மற்றொரு கென்ய வீரர் டங்கன் கிபெத் இரண்டாவது இடத்தையும், அவரைவிட 12 வினாடி பின்னால் வந்த தான்சானியாவைச் சேர்ந்த மார்ட்டின் சுல்லே மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.

பெண்கள் பிரிவில் ரஷ்யாவைச் சேர்ந்த ஜரினா திமோபெயவா முதலிடத்தைப் பிடித்தார். அவர் ஒரு மணி பத்து நிமிடம் 35 வினாடிகள் எடுத்துக்கொண்டார். இரண்டாவது இடத்தை கென்ய வீராங்கனை ரீட்டா ஜெப்தோவும், மூன்றாவது இடத்தை மற்றொரு கென்ய வீராங்கனை ஹெலன் கிமுடாய் பிடித்தனர்.

இதில் வெற்றி பெற்றவர்களுக்கு மொத்தத்தில் ரூபா 70 இலட்சம் பரிசு வழங்கப்பட்டது. மரதன் போட்டிக்கு ஆசியாவிலேயே வழங்கப்படும் அதிகபட்ச பரிசு இது ஆகும்.

இதேவேளைஏனைய விளையாட்டு வீர, வீராங்கனைகளுக் கான மரதன் போட்டியில் இந்தியா வின் பல்வேறு துறையைச் சார்ந்த முன்னாள் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

இந்தவகையில், கபில்தேவ், பி.டி.உஷா, சைனி ஆபிரகாம், தன்ராஜ்பிள்ளை, ரத்தோர் உட்பட ஐயாயிரம் விளையாட்டு வீரர்களும் மற்றும் 15 ஆயிரம் பொதுமக்களும் இதில் கலந்துகொண்டு ஓடினார்கள். இந்த ஓட்டப்பந்தயத்தை டெல்லி மாநில முதல்வர் ஷீலா தீட்சித் தொடக்கி வைத்தார். இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் சுரேஷ் கல்மாடி முன்னிலை வகித்தார்.

பொதுமக்களிடம் பல்வேறு விடயங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துகிற நோக்கத்துடன் இந்த மரதன் ஓட்டப்போட்டி நடத்தப்பட்டது.

# ரஷ்ய ஓபன் டெனிஸ் மேரிபியஸ் சம்பியன்!

(மொஸ்கோ)



ரஷ்ய ஓபன் டெனிஸ் போட்டியில் பெண்களுக்கான சம்பியன் பட்டத்தை பிரான்சைச் சேர்ந்த மேரியியஸ் வெற்றி கொண்டார்.

அவர் இறுதிப் போட்டியில் தம்மை எதிர்த்து ஆடிய இத்தாலியைச் சேர்ந்த பிரான் செஸ்காவை 6-4,6-3 நேர் செட்களில் வெற்றி பெற்று பட்டம் வென்றார்.

# துலிப் கோப்பை போட்டியில் கங்குலி விளையாடலாம்!



(கல்கத்தா)

இந்திய கிரிக்கெட் அணி முன்னாள் தலைவர் கங்குலி முழங்கையில் ஏற்பட்ட காயத்திற்கு கல்கத்தா நிபுணர் முகர்ஜியிடம் சிகிச்சை பெற்று வருகிறார்.

கங்குலியின் உடல்நிலை குறித்து வெளியாகியுள்ள தகவல்களின்படி கங்குலிக்கு ஏற்பட்டுள்ள காயம் குணமடைந்து வருகிறது. இதே நிலை நீடித்தால் வருகிற 20ஆம் திகதி ராஜ்காட்டில் நடைபெறும் துலிப் கோப்பைக்கான போட்டியில் அவர் விளையாடலாம். எனினும் இப்போட்டியில் விளையாடுவது குறித்து கிரிக்கெட் வாரியம் தான் முடிவு செய்யும் எனத்தெரியவருகிறது.

# கடுமையாக உழைத்து அணியில் இடம் பிடிப்பேன்!



### தமிழக வீரர் பாலாஜி

(சென்னை)

சிறிலங்கா உடனடி ஒரு நாள் போட்டியில் இந்திய அணியில் இடம் பெறாமல் போன தமிழக வீரர் பாலாஜி மீண்டும் கடுமையாக உழைத்து அணியில் இடம் பிடிப் பேன் எனத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்; இலங்கைக்கு எதிரான போட்டியில் இந்திய அணியில் இடம்பெறாமல் போனதை துரதிர்ஷ்டவசமாக நினைக்கவில்லை. இப்போது எல்லாமே திறமையைப் பொறுத்துத்தான் அமைகிறது.

சேலஞ்சர் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நான் சிறப்பாகச் செயற்படவில்லை. அடுத்ததாக நடைபெறும் துலிப்கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கின்றேன். இதில் நான் சிறப்பாக பந்து வீசுவேன். தற்போது அணியில் இடம்பெற திறமைதான் முககியம் கடின உழைப்பின் மூலம் மீண்டும் இந்திய அணியில் இடம் பிடிப்பேன்

துலிப் கிரிக்கெட் போட்டியை ஆவலுடன் எதிர் நோக்கியுள்ளேன். இநதப் போட்டியில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி இந்திய அணியில் இடம் பெற முயற்சி செய்வேன். வேகப்பந்து வீச்சாளர்களிடையே அணியில் அதிக போட்டி உள்ளது. எனது திறமை மீது எனக்கு நம்பிக்கை உள்ளது என்றார்.





சிந்தனைக்கு

தமிழினத்தின் நீண்ட பெருமை மிக்க வரலாற்றில் புதைந்துபோன ஒருவீரமரபு மீண்டும் புதுப்பிக்கப் பட்டிருக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 18.10.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# வெறும் காகிதத் தாள்களே

சிறிலங்கா சனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் இனப்பிரச்சினைத் தீர்வில் எத்தகைய பங்காற்றக் கூடியவை? அதாவது, சனாதிபதி வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களில் உள்ள நம்பகத்தன்மை எத்தகையது? இவற்றில் தமிழ் மக்கள் எத்தனை தூரம் நம்பிக்கை வைக்க முடியும்?

சிறிலங்காவில் நடைபெறும் முதலாவது சனாதிபதித்தேர்தல் அல்ல இது. ஆகையினால் தற்பொழுது வெளியாகும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் தான் முதலாவது தேர்தல் விஞ்ஞாபனங்களும் அல்ல. 1978 ஆம் ஆண்டின்பின் காலத்திற்குக்காலம் தேர்தல்களும் நடைபெற்றுள்ளன. தேர்தல் விஞ்ஞாபனங்களும் வெளியிடப்பட்டும் வந்துள்ளன.

ஆனால் இத்தேர்தல் விஞ்ஞாபனங்கள் யாவற்றிலும் இனப் பிரச்சினை தொடர்பான நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் உள்ள சுவாரசியமான அம்சம் என்னவென்றால், அனைத்துத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளமையே ஆகும்.

அதாவது, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதை அடியோடு விரும்பாதவர்களும், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே வழி என நம்புகின்றவர்களும் கூட இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்படும் என்றே கூறியுள்ளார்கள். அத்தோடு, ஒவ்வொருவரும் தமது தீர்விற்கு வழிமுறையும் கூறிவந்துள்ளனர்.

ஆனால், இத் தேர்தல் விஞ்ஞாபனங்களை வைத்துத் தேர்தலில் வென்றவர்களும் சரி, தோற்றவர்களும் சரி, இவ்விஞ்ஞாபனங்களின் அடிப்படையில் என்றுமே நடந்துகொண்டவர்களாக இல்லை. மாறாக எதிர்மறையான நிலைப்பாட்டையே கடைப்பிடித்தனர்.

எடுத்துக் காட்டாக, ஐ.தே. கட்சி அரசாங்கம் பெரும் யுத்தத்தை நடத்தித் தோல்வி கண்டநிலையில் இருந்த போது சனாதிபதித் தேர்தலில் போட்டியிட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும் எனத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டார்.

ஆனால், அவரால் ஆறு மாதங்களுக்குக் கூட யுத்தத்தைத் தவிர்த்துவிட முடியாது போய்விட்டது. அண்மைய இலங்கை வரலாற்றில் தமிழ் மக்களுக்கு எதிரான மிக மோசமான யுத்தத்தை நடத்தியவராகச் சனாதிபதி சந்திரிகாவே இருந்தார். அவ்வாறு அவர் நடத்திய யுத்தத்தை சிங்களத் தலைவர்கள் எவரும் எதிர்க்கவில்லை. அவசரகாலச் சட்டத்திற்கு ஐ.தே.க வழங்கிய ஆதரவும், சில வேளைகளில் அது அவசரகாலச் சட்ட வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது வெளியேறியமையும் ஒருவகையில் யுத்தத்திற்கு வழங்கிய ஆதரவாகவே இருந்தது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தற்போதைய சுதந்திரக்கட்சி சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு, சுனாமிப் பொதுக்கட்டமைப்புப் போன்றவை அமுல்படுத்தப்படும் என்பன போன்றவை இடம்பெற வேண்டும் என வற்புறுத்தலாம். ஆனால், அடிப்படையில் சனாதிபதி சந்திரிகா இவற்றிற்கு ஆதர வாளரல்ல. அவ்வாறு இருந்திருப்பின் தனது ஆட்சிக்காலத்தில் நாட்டில் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டிருக்க முடியும்.

இதேவேளை 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று ஐ.தே. கட்சி ஆட்சிக்கு வந்த போதும் அது கூறிய அரசியல் மாற்றம், திருப்பம் ஏற்பட்டதாக இல்லை. விடுதலைப்புலிகளுடன் பல சுற்றுப் பேச்சுக்களை அரசாங்கம் நடத்தியபோதும் அதனால் கிட்டிய பயன்தான் என்ன? தமிழ் மக்கள் அடைந்த நன்மைதான் என்ன?

பேச்சுவார்த்தைகளை நடத்தி சில உடன்பாடுகளுக்கு வந்த அரசாங்கம் அவற்றின் அமுலாக்கத்தில் அக்கறை காட்டவில்லை. எடுத்துக்காட்டாக சிரான் விடயத்தில் ரணில் அரசாங்கம் நடந்து கொண்ட விதமும், உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக் குடியேறுதல் தொடர்பான விடயத்தில் அரசாங்கம் போட்ட முட்டுக் கட்டையும் இழுத்தடிப்பும் ஐ.தே. கட்சியும் இனப்பிரச்சினை விடயத்தில் தீர்வெதையும் எட்டுவதற்குத் தயாராக இல்லை என்பதையே வெளிப்படுத்துவதாய் இருந்தது.

ஆகையினால் தற்பொழுது வெளியிடப்படும் தேர்தல் விஞ்ஞாபனங்களினால் மட்டும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று ஏற்படும் என எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஏனெனில், தேர்தல் விஞ்ஞாபனங்கள் என்பவை ஒரு மரபுவழிச் செயற்பாடாகக் கொள்ளத்தக்கவையே ஒழிய தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பார்த்தே மக்கள் வாக்களிக்கின்றனர். தீர்மானங்கள் மேற்கொள்கின்றனர் என்பதெல்லாம் போலித் தனமானவை.

ஆனால், ஒன்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்படும் விடயங்களில் தாம் எதைச் செய்ய மாட்டோம் என வேட்பாளர்கள் கூறுகின்றனரோ அவ்விடயத்தில் அவர்கள் மிகவும் உறுதியாகவே உள்ளனர். ஆகையினால் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருந்து எவை எவை நிறைவேற்றப்படமாட்டாதவை என்பது மட்டுமே எடுத்துக் கொள்ளத் தக்கவையாகும். அதற்கு அப்பால் தேர்தல் விஞ்ஞாபனம் என்பது வெறும் காகிதத் தாள்களுக்கே சமனானதாக இருக்கும்.

# தென்னிலங்கையில் த.பு கழகம் குறித்து அவதூறு

# அதிருப்தி தெரிவித்து சனாதிபதிக்கு த.பு கழகம் கடிதம்

சிறிலங்கா அமைச்சர்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் அவதூறு விமர்சனங்கள் குறித்த தனது அதிருப்தியை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கடிதம் மூலம் தெரிவித்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனைத்துலக இயக்குநர் நாக நரேந்திரன் எழுதியுள்ள கடிதத்தில்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு எதிராக அவதூறுப் பரப்புரைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் புனர்வாழ்வுக் கழகம் தாக்குதலுக்குள்ளாகி இருக்கிறது.

இத்தகைய பிரச்சாரங்களால் யுத்தம் மற்றும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேச மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றுவது பாதிப்படைந்துள்ளன.

ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிகளைப் பாராட்டி நீங்கள் விருது வழங்கிச் சிறப்பித்தீர்கள். உங்களுடைய அரசாங்கமும் முன்னைய அரசும் சர்வதேச ஊடகங்களும் புனர்வாழ்வுக் கழகப் பணியின் செயற்பாடுகளை அங்கீகரித்துள்ளன.

இந்த நிலையில் விமர்சனங்கள் மற்றும் தாக்குதல்கள் புனர்வாழ்வுக் கழகத்தின் மீது நடாத்தப்பட்டு வருகின்றன. இது அமைதி முயற்சிகளில் வடக்கு கிழக்கு மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை இழக்க வைக்கும் செயலாகும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# சிறு சம்பவம் இடம்பெற்றாலும் நவ. 19 இல் மீள வாக்களிப்பு

நாட்டின் எப்பகுதியிலேனும் தேர்தல் சட்ட விதிகளை மீறி சிறுசம்பவம் இடம்பெற்றாலும் அங்கு நவம்பர் 19 ஆம் திகதியில் மீள வாக்களிப்பு இடம்பெறும் என தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

மீள வாக்களிப்பதற்கான வாக்குச் சீட்டுக்கள் கூட அரச அச்சகத்தில் அச்சிடப்பட்டு விட்டதெனவும் கூறினார். எனவே தேர்தலில் ஆள் மாறாட்டம் செய்வதை யாரும் விரும்ப வேண்டாம். தேர்தல் விதி முறை களுக்கு ஏற்ப நடந்துகொண்டு ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

நவம்பர் 17 ஆம் திகதி நடைபெறவிருக்கும் சனாதிபதித் தேர்தல் தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளைச் சீராக்குவதற்கான முன் னோடிக் கூட்டம் இராஜகிரியவிலுள்ள தேர்தல் செயலகத்தில் நடைபெற்றபோது மேற்கண்டவாறு கூறினார். வடக்கு கிழக்கில் சனாதிபதித் தேர்தலை எவ்வாறு நடாத்துவது என்பது தொடர்பாகவும் அங்கு கலந்துரையாடப்பட்டது. தேர்தல் காலத்தில் ஊடகத்துறையினர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது தொடர்பான வழிகாட்டி நூல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

# கட்சி அரசியல் மூலம் பௌத்த குருமார் நாட்டை அழிக்க துணை புரிகின்றனர்

– இரத்தினபால தேரர்

(கொழும்பு)

பௌத்தகுருமார் கட்சி அரசியலின் மூலம் நாட்டை அழிக்கத் துணை புரிந்துள்ளனர் என நாட்டுப் பற்றுடைய தேசிய இயக்கத்தின் அமைப்பாளர் இரத்தினபாலதேரர் கூறியுள்ளார்.

குருநாகலில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறுகையில்; புத்தபகவானின் உபதேசத்தின் அடிப்படையில் நாட்டிற்கு தலைமைத்துவம் வழங்க வேண்டும். பௌத்த துறவிமார் கட்சி அரசியலில் இருந்து விலகி தேசிய அரசியலை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

# பத்திரிகையாளர் கனகரவியின் “பொங்குதமிழ்” நூல் வெளியீடு

(வவுனியா செய்தியாளர்)

சுயாதீன பத்திரிகையாளர் கனகரவியின் “பொங்கு தமிழ்” என்ற நூல் வெளியீட்டுவிழா கடந்த சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியில் நடைபெற்றது.

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் மு.குகதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் சிவலிங்கம் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து வரவேற்புரையினை சக்தி வானொலி வவுனியா செய்தியாளர் கபில்நாத் நிகழ்த்த, அறிமுக உரையை முல்லை. தமிழ்ச்சங்கத் தலைவர் சரவணபவன் நிகழ்த்தினார். அடுத்து பொங்குதமிழ் தொடர்பாக பத்திரிகையாளர் கனகரவி பல்வேறு பத்திரிகைகளிலும் எழுதிய கட்டுரைகளினதும் தொகுப்பான “பொங்கு தமிழ்” என்ற நூலை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம், திருமதி கனகரட்ணம் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் சிறப்புப் பிரதிகளை வழங்கிக் கௌரவித்தார்.

அடுத்து மதிப்பீட்டுரையை முல்லை. வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரட்ணம் நிகழ்த்த, சிறப்புரையை மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார். இறுதியாக ஏற்புரையை நூலாசிரியர் கனகரவி நிகழ்த்தினார். (10)

# சிலாபத்தில் வீதி விபத்து எட்டு வயதுச் சிறுமி பலி

(கொழும்பு)

புத்தளம், கொழும்பு வீதியில் சிலாபம் பண்டாரவத்தை பிரதேசத்தில் நிகழ்ந்த வாகன விபத்தில் எட்டு வயதுச்சிறுமி உயிரிழந்துள்ளார். மேலும் ஆறு பேர் கடும் காயங்களுக்குள்ளானார்கள். இந்தவிபத்து நேற்றுக்காலை பத்து மணிக்கு நிகழ்ந்தது.

மாதம்பையில் இருந்து சிலாபம் நோக்கிச் சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டியொன்றும், சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த பாரவூர்தி ஒன்றும் மோதிக்கொண்டதால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. விபத்து நிகழ்ந்த வேளையில் முச்சக்கர வண்டியின்சாரதியும், வேறு எட்டுப் பேரும் பயணம் செய்துள்ளனர். முச்சக்கரவண்டியில் சென்றவர்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. மோசமான நிலையிலுள்ள இருவர் கொழும்பு தேசியவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் சிலாபம் ஆதாரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மணலை ஏற்றி வந்த பாரவூர்தி மிக வேகத்துடன் வந்ததாக அறிவிக்கப்படுகிறது. வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாததன் காரணமாக இவ்விபத்து நிகழ்ந்திருக்கலாமென்று சிலாபம் பொலிஸ் வாகனப் போக்குவரத்துப் பிரிவினர் கருதுகின்றனர். பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். பாரவூர்தியும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளது.

# கண்காட்சியும் புத்தக விற்பனையும்

(தென்மராட்சி)

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபை பொது நூலகத்தால் இன்றும் நாளையும் நூலக கண்காட்சியும் புத்தக விற்பனையும் நடைபெறவுள்ளதாக நூலக சபையினர் தெரிவித்துள்ளனர். மற்றும் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் ஒரு தொகுதி நூல்கள் சாவகச்சேரி நகரசபைக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (28)

PUBLIC LIBRARY JAFFNA

# -ராஜீவ் காந்தி கொலை வழக்கு

# மரண தண்டனை விதிக்கப்பட்டோருக்கு

# மன்னிப்பு வழங்க இந்திய சனாதிபதி பரிந்துரை



முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்த வழக்கில் தூக்குத்தண்டனைவிதித்து தீர்ப்பளிக்கப்பட்ட மூன்று பேருக்கு மன்னிப்பு வழங்கலாம் என இந்திய சனாதிபதி அப்துல் கலாம் ஆலோசனை கூறியுள்ளார்.

1991 ஆம் ஆண்டு தமிழகம் சிறிபெரும் புத்தூரில் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் வைத்துக் கொலை செய்யப்பட்ட முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியை கொலை வழக்குத் தொடர்பில் முருகன் பேரறிவாளன் சின்னசாந்தன், நளினி, ஆகியோருக்கு வழக்கில் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப் பட்டிருந்தது.

தனக்குத் தண்டனையை எதிர்த்து மேன்முறையீடுசெய்த நளினியின் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது ஏனையோர்கள் மூவரும் தண்டனை நிறைவேற்றப்படாமல் 14 ஆண்டுகள் சிறையில் இருந்து வந்தனர்.

இந் நிலையில் இவர்கள் மூவரும் தமக்கான தண்டனையை விலககி மன்னிப்பு வழங்கக் கோரி இந்தியக் குடியரசுத் தலைவருக்கு மனுக் கொடுத்தனர் இதனைப் பரிசீலித்த இந்திய குடியரசுத்தலைவர் அப்துல் கலாம் இது தொடர்பாக பல்வேறு யோசனைகளை மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளார்.

அதில் மரணதண்டனையில் இருந்து ராஜீவ் கொலையாளிகள் எனக் கருதப்படும்.முருகன், பேரறிவாளன், சின்னசாந்தன் ஆகி யோருக்கு மன்னிப்பு அளிக்கலாம் என்று மத்திய அரசுக்கு யோசனை தெரிவித்துள்ளார். இது போல் மற்ற மரண தண்டனைக் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்குவது குறித்து பரிசீலனை செய்யுமாறும் கூறியுள்ளார்.

மரண தண்டனைக் கைதிகள் அனுப்பியகருணை மனுக்கள் மத்திய உள்துறை அமைச்சகம்மூலம் சனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டன. எட்டுஆண்டுகளுக்கும் மேலாக அவை சனாதிபதியின் பரிசீலனையில் இருந்து வந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

## அனுமதிப்பத்திரமற்ற துப்பாக்கி வைத்திருந்த நால்வர் வவுனியாவில் பொலிசாரால் கைது

வவுனியா செட்டிகுளம், புதுக்குளம் பிரதேசங்களில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது அனுமதிப்பத்திரமற்ற துப்பாக்கிகளை வைத்திருந்த நால்வர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இப்பிரதேசங்களில் ஆயுதங்களைக் காண்பித்து மக்களிடம் கப்பம் பெறல், மக்களை அச்சுறுத்தல் ஆகிய சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுவதாக சிறிலங்கா பொலிஸ்மா அதிபருக்குப் புகார்கள் கிடைத்ததையடுத்து இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொலிஸ்மா அதிபரின் உத்தரவிற்கமைய செட்டிகுளம் பொலிசார் நேற்றுமுன்தினம் தேடுதல் நடததி அனுமதிப்பத்திரமற்ற நான்கு துப்பாக்கிகளைக் கைப்பற்றியுள்ளதுடன் நால்வரைக் கைது செய்தனர். இவர்கள் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

## சுகாதாரக்குழுக்கூட்டம்

(அலுவலகசெய்தியாளர்)

சுகாதாரக்குழுக்கூட்டம் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு சுகாதாரத் திணைக்கள பணிமனை மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அக்கூட்டத்திற்கு சுகாதாரத் திணைக்களத்திற்குட்பட்ட நிறுவனத்தலைவர்களையும் சுகாதார அபிவிருத்திக்குழுவிலுள்ள அரச அரசசார்பற்ற நிறுவனத் தலைவர்களையும் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி சுகாதார சேவைகள பிரதிப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (கு)

## சனாதிபதித்தேர்தலில் யார் வென்றாலும் அமைதிப்பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும்

### -எரிக்சூல்ஹெய்ம் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுக்குப் பின் இனப்பிரச்சினைக்கான அமைதிப்பேச்சுகள் முன்னெடுக்கப்படும் என்று நோர்வே அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள இலங்கைக்கான விசேட தூதர் எரிக்சூல்ஹெய்ம் தெரிவித்தார்.

பி.சி.சி யின் சிங்கள சேவையான சந்தேசியாவுக்கு அமைச்சராகப் பொறுப்பேற்ற பின் அளித்த நேர்காணலில் எரிக் சூல்ஹெய்ம் இதைத் தெரிவித்துள்ளார்

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் தேர்தலுக்குப்பின் அமைதிப்பேச்சுக்கள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படும் இந்த அமைதிப் பேச்சுக்களில்தான் கண்டிப்பாக நேரடியாக தலையிட உள்ளதாகவும் சூல்ஹெய்ம் அந்த நேர்காணலில் மேலும் கூறியுள்ளார்.

### -யாழ். நவீனசந்தைக் கட்டடத்தில்-

## மின்மாற்றிகளில் மின் கசிவு விபத்து குறித்து வர்த்தகர்கள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மின்சார சபையின் அசமந்தப்போக்கினால் யாழ்.நவீன சந்தையில் மின் விபத்து ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நவீன சந்தை உட்புற வாசலில் உள்ள உயர் அழுத்த மின்மாற்றிகள் உடைந்து சிதைந்து மின்கசிவு தொடர்ந்து ஏற்பட்டு வருவதை கடந்த ஒரு மாதத்திற்கு முன் இருந்து நவீன சந்தைக் கடை உரிமையாளர்கள் யாழ். மின்சார சபையின் கவனத்திற்குக் கொணடு சென்றும் இதுவரை உரிய பாதுகாப்பு நடவடிக்கையினை மின்சார சபையினர் மேற்கொள்ளாமல் இருந்து வருகின்றனர் என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். மழை காலங்களில் திடீரென ஏற்படும் மின்கசிவுகள் பெரும் தீவிபத்துக்களைக் கொண்டு வரலாம் என வர்த்தகர்கள் அச்சப்படுவதாகவும், இது குறித்து மின்சார சபையினர் கவனத்தில் எடுத்து உடனடியாக இவற்றைச் சரி செய்ய வேண்டுமென வர்த்தகர்கள் கோரியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## ஆண்டு-5 புலமைப்பரிசில் பரீட்சை சித்தியடைந்த மேலும் சில மாணவர் விபரம்

(முள்ளியவளை)

ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மேலும் பலரது விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் சி.விதுர்சனா-146 புள்ளிகளையும், தே.தேவிகா-146 புள்ளிகளையும்,அ.அனுசன் 145 புள்ளிகளையும், ம.கீர்த்தனா-135 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தில் ப.லோகசயன்-136 புள்ளிகளையும், க. நிருத்தனா 133 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். (ஆ)

## புலிகளின் வாக்குகளால் ரணில் வெற்றி பெறலாமென கனவு காண்கிறார்

### -சோமவன்ச அமரசிங்க கூறுகிறார்

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் விடுதலைப்புலிகளின் வாக்குகளைக் கொண்டே ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறத் தயாராகிறார் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறியுள்ளார்.

ஆனமடுவயில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சோமவன்ச அமரசிங்க பேசும்போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலஙகை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் வாக்குகளை வைத்துக் கொண்டே இன்று ஐக்கியதேசியக் கட்சி தனது வெற்றி குறித்து பேசுகிறது.

எனினும் அதன் உண்மை நிலை என்னவென்பது பற்றி எதிர்வரும் நவம்பர் 18 இல் அறிந்து கொள்ள முடியும், ரணிலின் வெற்றியைத் தீர்மானிப்பது விடுதலைப்புலிகளா அல்லது சாதாரண பொது மக்களா என்பதை நவம்பர் 17 ஆம் திகதி அறிந்து கொளள முடியும் என்றார் சோமவன்ச.

## ரணிலின் கூட்டத்தில் பேனாவடிவில் துப்பாக்கி

### -இளைஞர் தப்பி ஓட்டம்

(திருகோணமலை)

திருகோணமலையில் ரணிலின் பொதுக்கூட்டத்தின்போது இளைஞர் ஒருவரிடமிருந்து பேனாவடிவிலான துப்பாக்கியொன்று கைப்பற்றப்பட்டதாக ரணிலின் பாதுகாப்புப் பிரிவினர் கூறுகின்றனர்.

இளைஞர் ஒருவரின் பேனாவை பரிசோதித்தபோது அது துப்பாக்கி எனத் தெரியவந்ததாகவும் ஆனால் இளைஞர் தப்பி ஓடிவிட்டதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

## நெடுந்தீவில் படகு ஏற்றும் தளம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் துறைமுகப்பகுதியில் படகு ஏற்றும் தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இத்தளம் அமைக்கப்பட்டதன் மூலம் இலகுவாகவும் சேதமின்றியும் படகுகளை ஏற்ற வழியேற்பட்டிருப்பதாக மீனவ சங்கங்கள் தெரிவித் துள்ளன. (28)

### அமைச்சர்...

தேர்தல்வரை வெளிநாட்டில் தங்கியிருக்க வேண்டும் என்று சிறிலங்கா சுதந்தரக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அநுராவிற்கு ஆலோசனை வழங்கியிருந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

### நோர்வேயில்.....

பிரதமராக தொழில்கட்சியைச் சேர்ந்த ஸ்ரோல்ரன்பேர்க்கும் வெளியுறவுத்துறை அமைச்சராக ஜோனர் கட்ஸ்டோரும் அபிவிருத்தி அமைச்சராக சோசலிச இடதுசாரிக்கட்சியைச் சேர்ந்த எரிக்சூல்ஹெய்மும் பதவி ஏற்றுள்ளனர்.

### தேர்தல்...

சேர்ந்தவர்களும், பல முக்கிய குற்றவாளிகளும் தேர்தல் வன்முறைகளில் ஈடுபடத்தயாராவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இவர்கள் ஏற்கனவே நாட்டின் பல இடங்களுக்குச் சென்று வாடகைக்கு வீடுகளை எடுத்துத் தங்கியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### 24தமிழ் இளைஞர்....

போது 2002ஆம் ஆண்டின் முக்கிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிககப்பட்டுள்ளது.

### பிரதேச...

யில் இவ்வாறான சந்திப்புக்களை நடத்த முடியாது என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்திருப்பது வேதனையானது என்றும் அவர் குறிப்பிட்டார். போர்நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் பிரதேச மட்டத்தில் இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளின் தளபதிகளும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவ்வாறான பல சந்திப்புக்கள் இடம்பெற்றுவந்த போதிலும் தேசவிரோதக் குழுவினருடன் இராணுவத்தினர் இணைந்து செயற்படுவதாக குற்றஞ்சாட்டி இந்தச் சந்திப்புக்களிலிருந்து விடுதலைப்புலிகள் ஒதுங்கிக் கொண்டனர். இந்த நிலையில் இப்போது இத்தகைய சந்திப்புக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார். இதேவேளை, யாழ் குடாநாட்டில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துவருவது குறித்து கண்காணிப்புக்குழு கூடிய கவனம் செலுத்தியுள்ளது என்று தெரிவித்த ஹொக்லண்ட் குறிப்பாக கடந்தவாரம் இடம்பெற்ற படுகொலைகள் அங்கு நிலைமைகள் மோசமடைந்து வருவதையே காட்டுவதாகவும் தெரிவித்தார்.

### இந்தியாவில்....

பரிஷை சிறிலங்காவின் சமாதான நீதிபதியாக பரிந்துரை செய்தவர் சிறிலங்காவின் பிரதி அமைச்சராக இருக்கும் மேர்வின் சில்வா. சிறிலங்கா நிதியமைச்சினால் வழங்கப்பட்ட நியமனத்திற்கமைய கடந்த ஏழாம் திகதி கொழும்பு மேலதிக நீதவான் சுஜீவநிஸ்சங்க முன்னிலையில் குடுலால் பதவியேற்பு நிகழ்ச்சி நடந்தது.ஒரு கடத்தல் குற்றவாளியாக போதைப்பொருள் தடுப்புத்துறை பட்டியலில் இடம்பெற்றுள்ள நபரை பிரதியமைச்சர் மேர்வின் சில்வா எப்படி சமாதான நீதிபதியாகப் பரிந்துரை செய்யலாம் என்ற சர்ச்சை அப்போது எழுந்தது. இதனிடையே இந்தியாவிடமிருந்து குடுலால் தேடப்படும் குற்றவாளி என்ற தகவல் தொலைநகல் மூலம் கிடைத்துள்ளதால் சமாதான நீதிபதி பதவிக்கு அவர் தகுதியற்றவராகிறார் என்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரி ஒருவர் கூறினார்.

சிறிலங்காவின் போதைப்பொருள் தடுப்புப்பிரிவின் கடத்தல்காரர்கள் பட்டியலில் குடுலால் இடம்பெற்றிருந்தாலும் குடுலாலிடம் கையடையாளம் பெறும் அதிகாரிகள் சிலர் அவரை எந்த வழக்கிலும் சேர்ப்பதில்லை என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

### சனாதிபதியின்....

அமையாது தயாரிக்க வேண்டும் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வலியுறுத்தி வருகிறார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் மகிந்த ராஜபக்ஷவினால் வெளியிடப்பட விருந்த தேர்தல் விஞ்ஞாபன நகலை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிராகரித்துள்ளார்.

இதனையடுத்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நிராகரிப்பையும் கவனத்தில் கொள்ளாது இறுதேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட மகிந்தராஜ பக்ஷ தீர்மனித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று அவர் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் தலைவர்களிடம் இவ் விஞ்ஞாபனம் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தனது சம்மதமின்றி மகிந்தராஜபக்ஷ தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டால் அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 24 ஆம் திகதி கட்சித்தலைவரும், ஐ.தே.க சனாதிபதி வேட்பாளருமான ரணில்விக்கிரம சிங்கவைச் சந்தித்தபின் பாராளுமன்றத்தைக் கலைக்கவும் முடிவு செய்யலாம் எனத் தெரிவிக்கபடுகிறது.

### புத்தளம்.....

யில் ஈடுபட்டிருந்த பொலிசார் நிறுத்த முற்பட்டபோது அவர்கள் பொலிசார் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பி ஓடி விட்டதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

இதேவேளை இச்சம்பவத்தின்போது காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லப்பட்ட போது அங்கு சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணமடைந்துள்ளார்.

உந்துருளியில் வந்தவர்கள் கொழும்பை நோக்கி தப்பிச்சென்றதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.